Regd. No. M. 4900. 16 பக்கங்கள்.

# குடி அரசு

உள்நாடு வருட சந்தா ரூ. 7-0-0. தனிப்பிரதி 0-2-0.
வெளிநாடு ,, ரூ. 9-0-0. ,, 0-2-6.

மாலை 22 ஈரோடு 26-3-1949 சனிக்கிழமை மலர் 29.

## ★ உனக்குரிமை யுண்டோ? ★

வெண்பா.

[1]

கற்றுணர்ந்து மாகலையைக் கண்கவருங்காட்சியுடன்
பொற்சிலையைத் தான்செய்த பொன்னப்பா—சற்றே
மனத்தெண்ணி நீசெய்த வார்சிலையைக் காண
உனக்குரிமை யுண்டோ உரை.

[2]

உடல்வேர்க்கக் கற்றாக்கி யொண்கோயில் கட்டுங்
குடல்சோறு காணாத குப்பா—முடிவில்
மனமுவக்க நீபுகுந்து வைத்தசிலை போற்ற
உனக்குரிமை யுண்டோ உரை.

[3]

ஊராரைத் தானத்தி ஒவ்வொன்றாய்த் தேடியங்கே
பாரார் புகழ்ந்திடவே பண்ணிவைத்த—தேரைச்
சனந்திரட்டித் தானிழுத்த வன்றியதி லேற
உனக்குரிமை யுண்டோ உரை.

[4]

மண்கொடுத்தாய் பொன்கொடுத்தாய் வைர முடிகொடுத்தாய்
கண்ணுறங்கல் செய்யாது கட்டிவைத்தாய்—என்னே
முணுமுணுத்து நீவணங்க மூலவிடம் போக
உனக்குரிமை யுண்டோ உரை.

[5]

கசையடி பட்டுங் கடுஞ்சிறை போந்தும்
வசைமொழி பெற்றாட்சி வாங்கி—நசிந்து
தினமடிவ தல்லால் திருப்பீட மேற
உனக்குரிமை யுண்டோ உரை.

—கோல்லிப்போருட்பன்.

புளுகு மூட்டை.

# கணபதி!

★

“யாரது?”

“என்னப்பா, இது! என்னைக் கூட தெரியவில்லை? நான் தான் கணபதி!”

“எந்தக் கணபதி—தொந்திக் கணபதியா?”

“ஆமாம். ஆற்றங்கரை, குளத்தங் கரைகளில் அரச மரத்தடியில் அமர்ந்திருக்கிறேனே. அது நான் தான். யானை முகத்தவா, பானை வயிறனே, ஒற்றைக் கொம்பா, விகார சொரூபனே என்று என்னைத் துதி நிந்தை செய்கிறார்களே பக்தர்கள், நீ கேட்டதில்லையா? எப்பொழுது மறந்தாலும் பக்தர்கள் என்னை இப்பொழுது மறக்கவே மாட்டார்களே!”

“ஏன்?”

“ஏனா? இப்போது பள்ளிப் பரீட்சை சமயமல்லவா! தினந்தோறும் என்னைச் சுற்றி வரும் மாணவ, மாணவிகள் எவ்வளவு! அடே யப்பா! இவ்வளவு பேரும் பரீட்சையில் தேறும்படி செய்ய வேண்டியது என் பொறுப்பாம்! என்ன முட்டாள் தனம்! என்னை வணங்கி விட்டுத் தொடங்கும் எந்தக் காரியமும் விக்கினமின்றி நடந்தேறும் என்பது இந்த மனிதர்களின் மூட நம்பிக்கை. நான் எடுத்த முதல் காரியமே தோல்வியாகி, இன்று நான் நிர்க்கதியான நிலையில் நிற்கிறேன்; நான் எப்படி மற்றவர் குறையைத் தீர்க்க முடியும்?”

“அஃதெப்படி உன் காரியம் தோற்றது?”

‘அது பெரிய கதை யப்பா! அந்த வயிற்றெரிச்சலை ஏன் நீ கேட்கிறாய்?’

“சும்மா சொல்லப்பா! தெரிந்து கொள்வது நல்லது தானே!”

“சாங்கோபாங்கமாக, ஆரம்பத்திலிருந்தே, சொல்லி விடுகிறேன்: என் தாயாரைப் பார்த்திருக்கிறாயா?”

“பார்வதி தானே? பார்த்ததில்லை, கேள்விப் பட்டிருக்கிறேன்.”

“மலையரசன் மகளாய்ப் பிறந்து மட்டற்ற அழகு படைத்த கட்டிளங்காரிகையாய் விளங்கினாள் என் தாய்—அதாவது பார்வதி. எப்படியோ இவள்மீது மையல் கொண்டு விட்டார் என் தந்தை—அதாவது பரமசிவன். இவரைப்பற்றித் தான் உனக்குத் தெரிந்திருக்குமே—அசல் பைத்தியம்; உருவமோ பயங்கரமானது! என் தாயாருக்கு இவரைப் பிடிக்கவேயில்லை. எனினும் பெற்றோரின் பிடிவாதத்தால் பரமசிவன் பார்வதிக்கு மாலையிட்டார். திருமணத்திற்குப் புரோகிதராயிருந்து நடத்தி வைத்தவர் பிரம்மதேவன்”

“எந்தப்பிரமா? எல்லாவற்றையும் படைக்கிறாரே, அவரா?”

“சாட்சாத் அவரேதான். இவருக்கு மணப்பெண்ணின் மேல் ஒரு கண். என் தாயாருக்கும் இவர் மேல் அந்தரங்கத்தில் காதல் இருந்திருக்கிறது: இந்தச் சங்கதி பின்பு நடந்த ஒரு சம்பவத்தின் மூலம் தெரியவந்தது”

“அது என்ன சம்பவம்?”

“அதாவது, அப்போதெல்லாம் பிரமாவுக்கும் அய்ந்து தலை, என் தந்தையான சிவபெருமானுக்கும் அய்ந்து தலைகள். ஒருமுறை என் தந்தையில்லாதபொழுது பிரம்மா கைலாசத்துக்கு வந்திருக்கிறார். தக்க தருணம் இதுதான் என்று என் தாயாரும் சம்மதிக்கவே...... இருவரும் இன்பவெள்ளத்தில் மிதந்து கொண்டிருந்தனர். திடீரென்று என் தந்தை வந்து விட்டார். கள்ளக்காதலரைக் கண்டதும் கோபக்கனல் மூண்டது. வாயில் வந்தபடி ஏசினார் என் தாயை. ஆனால் அவளோ ஒரு சரியான சிறிய சமாதானத்தின் மூலம் தப்பித்துக்கொண்டாள். அதாவது பிர்ம்மாவுக்கும் அய்ந்து தலைகளிருந்ததால் அவரைத் தன் கணவனாகிய சிவபெருமான் என்று கருதி விட்டதாகக் கூறினாள் என் தாய். உடனே என் தகப்பனார் சினம் பிரம்மாவின்மீது திரும்பிற்று. பிர்ம்மாவின் தலைகளில் ஒன்றைக் கிள்ளிவிட்டார். அந்தத் தலை இவர் விரலிலேயே ஒட்டிக்கொண்டு வெகு காலம் தொந்தரவு கொடுத்ததாம்”

“அது சரி. திருமண சமயத்தில் நடந்ததென்ன? அதை மறந்து விட்டாயே!”

“ஒன்றும் பிரமாதமில்லை. என் தாயும், தந்தையும், மணமக்களாய் மண அறையைச் சுற்றிவந்தபோது, புடவையை எங்கள் ஆசாரப்படி வரிந்து கட்டியிருந்ததால் என் தாயாரின் தொடை தெரிந்ததாம். அதன் அழகைப்பார்த்துவிட்ட புரோகிதரான பிர்ம்மாவுக்குக் காம வெறி தலைக்கேறி: இந்திரிய ஸ்கலிதம் ஆகிவிடவே, அதை அருகிலிருந்த ஒரு குடத்தில் பிடித்து வைத்தாராம்; அகத்தியர் அதிலிருந்து உண்டானவர்தானாம்”

“இதெல்லாம் இருக்கட்டும்; இதற்கும் உன் நிலைக்கும் என்ன சம்பந்தம்?”

“வருகிறேன், அவசரப்படாதே. இப்படியாகப் பைத்தியம் பிடித்த என் தகப்பனாருடன் என் அன்னை வேண்டாவெறுப்பாகக் காலந்தள்ளி வந்தாள். திடீரென்று பகலிலேயே என் தந்தை மிருக வெறி கொண்டு என் தாயை அழைப்பாராம். பக்கத்தில் யாரும் பார்த்துக்கொண்டிருந்தால் கூடக், கூச்சமின்றித் தன் இச்சையைத் தீர்த்துக்கொள்வாராம்.

சில காலங்கழித்து நான் பிறந்தேனாம். அது முதல் என் தாயார் ஆறுதலடைந்து என்னைப்போற்றி வளர்த்து வந்தாள். நான் என் இளமைப் பருவத்தில், என் தாயைப் போலவே மிகவும் அழகுடனிருந்தேன். என் தகப்பனார் ஸ்திரீ லோலராய் தாருகாவனம் முதலிய இடங்களிலெல்லாம் சுற்றியலைந்து கொண்டிருந்தார். இதையெல்லாம் பொருட்படுத்தாமல் என் தாய், தன் முழு அன்பையும் என் மீது செலுத்தி எப்போதும் என்னைப் பிரியாமல் இருந்து வந்தாள்.

எனக்கும் பதினாறு வயதாயிற்று. ஒரு நாள், (இதைக் கூறும்போது கணபதி விசனம் தாளாமல் கண்ணீரைத் துடைத்துக் கொண்டார்!) அந்தத் துக்ககரமான சம்பவம் நடந்தது:

என் தகப்பனார் வீட்டிலில்லை. என் தாய் குளிக்கப் புறப்பட்டாள். கடுமையான கோடை காலம். பக்கத்திலுள்ள குளத்து நீர் “குளுகுளு” ‘வென்று குளிப்பதற்கு அருமையாயிருக்கும். என் தாய் புறப்பட்டதும் “நானும் வருகிறேனம்மா” என்று கெஞ்சிக் கேட்டு, என் தாயின் கையைப் பிடித்துக் கொண்டு நானும் போனேன். குளத்தங்கரையை அடைந்ததும் என் தாய், “கணபதி! நீ இப்போது குளிக்கவேண்டாம். ஜலதோஷம் பிடித்துக்கொள்ளும். இந்தப் படித்துறை ஓரமாகவே நீ உட்கார்ந்துகொள். நான குளித்து விட்டு விரைவில் வந்துவிடுகிறேன்.” என்று கூறிவிட்டுப் படிகளின் வழியாக இறங்கித் தண்ணீருக்கருகில் போய் விட்டாள்.

சிறிதுநேரம் ஏதேதோ சிந்தித்துக் கொண்டிருந்துவிட்டேன். தற்செயலாகத் தண்ணீர்ப் பக்கம் பார்வையைச் செலுத்தினேன். சே!.........! கட்டுக் குலையாத உடல்—மெருகு குலையாத மாற்றுயர்ந்த தங்கம் போன்ற மேனி—எவ்வித ஆடையும் அணியாமல் என் அன்னை குளத்துப் படியில் அமர்ந்து உடலைத் தேய்த்துக் கொண்டிருந்தாள். மகன் தானே இருக்கிறான் என்ற துணிவு! ஒரு நிமிஷம் உற்றுப் பார்த்தேன். என் உடல்

(தொடர்ச்சி 14ம் பக்கம்)

[உரிமை ஆசிரியருக்கே]

# தொல்காப்பியப் பொருளதிகார விளக்கம்.

—(புலவர் குழந்தை)—

II.

## தொல்காப்பியப் பாகுபாடு.

தமிழ் மக்களின் செல்வக்குவையாய்த் திகழும் தொல்காப்பியம், எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என மூன்று பெரும் பிரிவை உடையது. ஒவ்வொரு அதிகாரமும் தனித்தனி ஒன்பதொன்பது இயல்புகளையுடையன. எழுத்ததிகாரம் 483 சூத்திரங்களையும், சொல்லதிகாரம் 462 சூத்திரங்கலளயும், பொருளதிகாரம் 665 சூத்திரங்களையும் உடையன. ஆகத் தொல்காப்பியம் 1610 சூத்திரங்களையுடையது. பொருளதிகார இயல்கள் (1) அகத்திணையியல் 55, (2) புறத்திணையியல் 36, (3) களவியல் 50, (4) கற்பியல் 53, (5) பொருளியல் 54, (6) மெய்ப்பாட்டியல் 27, (7) உவமயியல் 37, (8) செய்யுளியல் 243, (9) மரபியல் 110 என்பனவாம். இயல்களின் பின்னுள்ள எண் அவ்வியல்களின் சூத்திரத் தொகை எண்.

## பொருளின் பெருமை.

ஒரு நாட்டு மக்களிடை நிகழும் ஒழுக்க முறைகள் உலக வழக்கு எனப்படும். தீமை கலவாத பொருள் உலகில் ஒன்றும் இல்லாமை போல, மக்களுள் தீய ஒழுக்கமுடையோரும் சிலர் இருப்பது இயல்பே. ஆகவே, அந்நெறி தவறினோரை மறுபடியும் நன்னெறியில் நடக்கும்படி செய்ய வல்ல தகுதி மிக்க சான்றோர் ஒழுக்க முறையை, ஏனையோரும் கடைப்பிடித்து ஒழுகும் பொருட்டும், நாட்டின் பல்வேறு இடங்களில் வாழ்வோரும் ஒரே தன்மையாய் ஒழுகும் பொருட்டும், முன்னோர் முறைகளைப் பின்னோரும் அறிந்து இனவுணர்ச்சி கொள்ளும் பொருட்டும், நல்வழியில் நடக்கும் சான்றோர் வழக்குகளை மொழியியல்புக்கேற்ப அழகுறச் செய்யுளாகச் செய்வது செய்யுள் வழக்கு எனப்படும். செய்யுள் வழக்கை ஒட்டியே உலக வழக்கு நடப்பதால்—மக்கள் பெரும்பான்மை நடக்க வேண்டுமாதலால்; அச் செய்யுள் வழக்கு ஒரே தன்மையாய் இருக்கும் பொருட்டு அதை வரையறை செய்வது பொருளிலக்கணம் எனப்படும். பொருள்—ஒழுக்க முறை. எனவே, தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் கூறும் ஒழுக்க முறைகள் நமது முன்னைமயார் ஒழுகிய ஒழுக்க முறைகளேயாகும்.

உலக வழக்கை ஒட்டிச் செய்யுள் செய்யும் புலவர்கள், நாட்டின் பல்வேறு இடங்களிலும் வாழ்வோராதலால் ஓரிடத்துக்கோரிடம் மொழி வழக்கும் மாறுபடுதல் கூடும். அவ்வாறு மொழி வழக்கு மாறுபடின் அம்மொழியால் செய்யப்படும் செய்யுள் வழக்கும் மாறுபடும். செய்யுள் வழக்கு மாறுபடின், அச் செய்யுளைப் பயிலும் மக்களின் வாழ்க்கைத் துறையில் மாறுபாடு உண்டாவதோடு, அச் செய்யுள் வழக்கையே துணையாகக் கொண்டொழுகும் பிற்காலமக்களின்வாழ்க்கை முறை புதியதோர் நிலைமையினை அடைந்துவிடும். ஆதலால் தமிழ் நாடு முழுவதும் மொழி வழக்கு மாறுபடாமல் ஒரே நிலையாய் இருத்தற்பொருட்டுச் சொல் வரையறையும், சொல் நிலை மாறுபடாதிருத்தற்பொருட்டு எழுத்துவரையறையும் செய்தல் இன்றியமையாததாகும்.

ஆகவே, பொருளிலக்கணம் உலக வழக்கை ஒரு நெறியில் நடக்கும்படி செய்தாலும், சொல்லிலக்கணமும், எழுத்திலக்கணமும் பொருளிலக்கணத்தை அறிதற்குக் கருவியான மொழி இயல்பை ஒரு நெறிப்படுத்துதலாலும், எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம், பொருளிலக்கணம் என்னும் மூன்றும் மக்களின் வாழ்வியலுக்குக் கட்டாயம் வேண்டியனவாயின. இதுவே, ஒரு மொழியிலக்கணம் செய்வதன் பயனாகும். ஆசிரியர் தொல்காப்பியரும் இம் முறைப்படியே தொல்காப்பியத்தைச் செய்துள்ளாரென்பது அறிந்து இன்புறத்தக்கதொன்றாகும். எனவே எழுத்திற் சொல்லும், சொல்லிற் பொருளும் சிறப்புடையதாகையால், தமிழ் மக்கள் எல்லோரும் பொன்னே போல் போற்றிப் பயின்று பயன் பெறத்தக்கது பொருளிலக்கணமேயாகும். தமிழ் மொழிக்கே தனி உரிமையுடையதும், எழுத்தினும், சொல்லினும் சிறந்ததும், பழந் தமிழரின் வாழ்க்கை முறையைப் படம் பிடித்துக் காட்டுவதுமான பொருளிலக்கணத்தைத் தமிழ் மக்கள் புறக்கணித்துவருவதுதான் நமக்கு விளங்கவில்லை. தமது முன்னையோர் போல் பொருளிலக்கணத்தை இடையறாது பயின்றுவந்திருப்பரேல் தமிழ் மக்கள் இன்று இந்நிலைமை அடைந்திருக்கமாட்டார். தமிழ்நாடு அயலாராட்சிக்கு ஆட்பட்டிருக்காது. தமிழ்மொழி இன்றைய நிலையை எய்தியிருக்காது. 'பள்ளி மாணவர்க்குப் பொருளிலக்கணங்கற்பிக்கக்கூடாது' எனச் சூழ்ச்சியாக விலக்கி, தமிழ் மாணவர்களைத் தங்கள் முன்னையோர் வாழ்க்கை முறையை அறிய முடியாதவர்களாக்கி, 'தமிழன்' என்னும் பெயருக்குத் தகுதியற்ற கோழைகளாக்கி விட்டனர். சாற்றை விட்டுச் சக்கையைத் தின்பது போல், எதைக்கற்க வேண்டுமோ அதை விட்டுச் சாரமற்றதையே கற்பிக்கலாயினர். கட்டாயங் கற்றுத் தெரிந்து கொள்ளவேண்

(தொடர்ச்சி 13-ம் பக்கம்)

கதை கற்பனை.

சிறுகதை

நான்காம் பருவம்

# விலையற்ற மாணிக்கம்!

போட்டி

எண் 2.

உழவன் கந்தன் மகள் கண்ணம்மாள் மேல் பண்ணை பரமேச்வர அய்யர் கண்விழுந்தது! மனம் ஆசை கொண்டது. அய்யர் மனதை அடக்கிப் பார்த்தார். ஆனால் காலப்போக்கில் இளமை கடந்து யௌவனத்தை எட்டிப் பிடித்திருந்த கண்ணம்மாவின் பொன்னிற மேனியில் பூரித்துப் போன அய்யர் மனம் அவ்வஞ்சியுடன் கொஞ்சிடக் கூத்தாடிற்று.

ஆனால்...?

அய்யர் மனதை அடக்கினார். அது கட்டவிழ்த்துக் கொண்டு காமத்தின் எல்லை வரை சஞ்சரித்து இன்பங் கண்டது.

அய்யோ தெய்வமே! இதுவும் நின் சோதனையா என்று அறையில் தனித்து நின்று அரனிடம் முறையிட்டார்...? அங்கே அரனுக்குப்பதில் கண்ணம்மாள் காட்சிதந்தாள்.

அதற்குமேல்...? அவர் மனதை அடக்க விரும்பவில்லை. அதை வான லோகம் வரை சஞ்சரிக்க விட்டார். இரவு பகல் எந்நேரமும் கண்ணம்மாளின் தோற்றம் அவர் கருத்திலே நர்த்தனம் புரிந்தது.

இந்நிலை சில நாட்கள். அப்புறம் பதறும் மனம் பக்குவமடைய அர்த்தமற்ற சில கேள்விகள்!

"அடபாவி! பெண்பாவம் பொல்லாதது. அதை விலை கொடுத்து வாங்கிக் கொள்ளாதே!

"பாவ புண்ணியம் பரலோகத்தில் தானே!"

"ஸ்திரீமாயை பொல்லாதது என்று எத்தனை பேருக்கு உபதேசித்தாய். இப்போ..."

"நானே அந்த மாயையில் சிக்கி மகிழ்கிறேன் என்கிறாயோ? ஸ்திரி ஸ்பரிசத்தால் ஏற்படும் இன்ப உணர்ச்சியை உணர்ந்த பின்னர்தான் நான் கூறிய உபதேசத்தின் தவறுதலை உணர்கிறேன்"

"ஒரு பெண்ணின் வாழ்க்கையில் மண்போடுகிறாய்"

"அதற்கு நான் குற்றவாளியல்லவே அவளிடம் அழகிருக்கிறது. என்னிடம் ஆசைஇருக்கிறது. அழகை ஆசை ஆட்கொள்வது இயற்கை தானே"

"உன் அற்ப சுகத்திற்காக ஒரு குடும்பத்தின் மானத்தை கப்பலேற்றப் பார்க்கிறாய்?

"பணத்தைக் கொடுத்தால் அந்த நஷ்டத்தை ஈடுசெய்துவிடுகிறார்கள்!"

"வேலியே பயிரை மேய்ந்தால்"

"பயிர் என்றாவது ஒரு நாள் நிலத்தினின்றும் அகற்றப்பட வேண்டியது தானே"

"அவள் கற்பு என்னாவது?"

"கற்பு நிரந்தரமானதல்லவே! என்றாவது ஒருநாள் ஒரு கணவனால் அவள்கற்பு பறிக்கப்பட்டுத்தானேயாக வேண்டும்"

"அப்போ அவளை நீ ஏற்றுக் கொள்ளுகிறாயா?"

"சிந்திக்க வேண்டிய விஷயம் தான்"

"அவளோ தீண்டப்படாதவள். நீயோ பச்சைப் பார்ப்பாரப் புரோகிதன். தெரிகிறதா?"

"தெரிந்திருந்தும் அவள் மேல் ஆசை வளர்கிறது. அதற்காக ஆசையை அலக்கழிப்பதா?"

இப்படிப் பலநாள் படுக்கையறையில் அய்யர்உள்ளத்தில்போராட்டம். முடிவு ......? அவர் ஆசை வெற்றி பெற்றது! அதன் பலன் ஐய்ந்து ரூபாய் சம்பளத்தில் தாரிகை கண்ணம்மாள் அய்யர் 'ஆத்து' தொழுச்சாணம் அள்ளும் உத்தியோகத்தில் அமர்த்தப்பட்டாள்.

* *

"கண்ணம்மா......?"

"இதோ வாரேனுங்க"

மாட்டுக் கொட்டிலில் சாணம் அள்ளிக் கொண்டு நின்ற கண்ணம்மாள், அய்யர் அழைப்பின்மேல் வீட்டு வாசலில் வந்து நின்றாள்.

"ஏனுங்க கூப்பிட்டீங்க?"

"எது ஒரே கேள்வி மயமாய் இருக்கே!"

"இல்லீங்க......!"

"கண்ணம்மா, மற்ற நாட்களைவிட இன்னைக்கு ரொம்ப அழகா இருக்கேயே!"

பெண்களுக்குரிய நாணம் அவளைக் கவ்விக் கொண்டது. முகம் குப்பென்று சிவந்தது. அய்யரை எறிட்டுப் பார்க்கச் சக்தியற்ற கண்ணம்மாள் கால் விரலைப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

அய்யர் சிரித்தார்......! அவள் கலங்கினாள்?

"அப்படி யொன்னுமில்லீங்க"

"ஏங் கண்ணம்மா பொய் சொல்றே. நீ பொய் சொன்னாலும் உன் கொண்டையில் சொருகி இருக்கும் மல்லிகை மலர், நெற்றியிலே இட்டிருக்கும் குங்குமப் பொட்டு, உன் விசேஷ அலங்காரத்தைப் பகிரங்கப்படுத்துறதே!"

கண்ணம்மாளுக்கு அப்போதுதான் தான் ருது சாந்தி வீட்டுக்குப் போய் விட்டு வந்தது ஞாபகத்துக்கு வந்தது. மறு நிமிடம்......? மல்லிகை மலர் மடிக்கு வந்தது. பொட்டு அழிக்கப் பட்டது.

எண்டிஆயா வைத்துக் கொண்டு வந்தோம் என்கிற சிந்தனையிலாழ்ந்த கண்ணம்மாவை அய்யர் அதட்டும் குரலில் "ஏங் கண்ணம்மா நான் கேட்டுக் கொண்டிருக்கிறேன். நீ என்னமோ கலியாண மாப்பிள்ளை முன் நிற்பது போல நாலு கோணலாய் நிற்கிறாயே!"

அவள் பேச முயன்றாள். ஆனால் ...? நாவு தடுமாறிற்று. "அதுங்க... முருகன் மவ பொன்னி இருக்கில்ல அதுக்கு இன்னைக்கு ருது சாந்தி. அங்கேதான் இந்தப் பூ பொட்டெல்லாம் கிடைச்சுது. நேரமாயிட்ட அவசரத்தில் மறந்துபோய் வீட்டிற்கு வந்துட்டேன். நீங்கதான் காப்பாத்தனும"

"அட அதற்குள் எனிப்படி......? சும்மா பூவை வச்சுக்கோண்ணா!...... ஊம்......கண்ணம்மா இன்னைக்கு கொஞ்சம் வீட்டுக்குள்ளே வேலை இருக்கு"

"எஜமானியம்மாள்......?"

"அவா பொறந்தாத்துக்குப் போயிட்டா"

"சின்ன எஜமானி......?

"அவா எல்லோருந்தான் போயிட்டா!"

"அப்போ......?"

"நான் தனியாகத்தான் இருக்கேன்!......"

"கண்ணம்மாள் உள்ளத்தில் ஓர் வித அதிர்ச்சி மின்னலைப்போல் தோன்றி மறைந்தது......தனியாகவா இருக்கீங்க......! அவள் வாய் முணுமுணுத்தது.

"......அதனால் வீடெல்லாம் குப்பையா கொட்டிக்கிடக்கு. அதைக் கொஞ்சம் பெருக்குபோ......!

"வீட்டுக்குள்ளேயா......?"

"அட சும்மா பெருக்குண்ணா...!"

"நான்.... நான்......தீண்டப்படாதவள்"

அய்யர் பேசவில்லை. அவர் பார்வை ராதாகிருஷ்ணன் படத்தில்

(தொடர்ச்சி 12ம் பக்கம் பார்க்க

ஜா முத்தையா
நூலக அறக்கட்டளை

# வாழ்க! வெல்க!!



இன்முகம் தவழக் காட்சிதரும் தோழர் ஈரோட்டு ஆர். கே. வெங்கிடுசாமியவர்கள். இயற்கையாகவே செல்வக்குடியில் தோன்றிய இவர், எத்தகைய தயாள குணம் வாய்ந்தவர் என்பதும், எவ்வளவு பரிவோடு அதை பயன்படுத்துவார் என்பதும் அவரோடு பழகிய ஒவ்வொருவரும் நன்கு அறிவர். இப்படிப்பட்ட நற்குணமுடைய ஒரு தோழரின் தன்னலமற்ற தொண்டு, பெருந்துறை சானடோரியத்துக்குக் கிடைத்து இருப்பதைக் கண்டு பொதுநலவூழியம் புரியும் எவர்தான் மகிழ்ச்சியடையாமலிருக்க முடியும்?

கோயமுத்தூர் ஜில்லாவிலேயே உத்தியோக வட்டாரத்தில் இவரை அறியாத—இவரோடு பழகாத எந்த நபரும் கிடையாது என்கிற பெருமை இவருக்குண்டு. மந்திரிகள் யாராயிருந்தாலும் இவரின் தயாள குணத்திற்கு மதிப்பு வைத்தே ஆகவேண்டும் என்கிற பெருமையும் இவருக்குண்டு. இப்படி ஆசியல் வட்டாரத்தில் குறிப்பிடத்தக்க அளவுக்கு நல்ல செல்வாக்குப் படைத்தவராயிருந்தாலும் அந்தச் செல்வாக்கை முழுக்க, முழுக்கப் பொதுநல சேவைக்கே இவர் பயன்படுத்துகிறார் என்பதுதான் எவராலும் பாராட்டப்பட வேண்டியதாகும்.

ஈரோட்டு நகரத் தந்தையாக இவர் 9 ஆண்டுகள் விளங்கி, தன் திறமையான—கண்ணியமான நடத்தையால் ஈரோட்டு மக்களின் உள்ளங்களைக் கவர்ந்த இவர், பெருந்துறை க்ஷயரோக ஆஸ்பத்திரியின் வளர்ச்சியில் இன்று தன் முழுக் கவனத்தையும் செலுத்தியிருக்கிறார்.

க்ஷயரோகத்திற்கு விரோதியாய்—அதை ஒழித்துக் கட்டுவதில் இவ்வளவு முனைப்பாக இவர் இறங்கியதற்கு, இவரின் இயற்கையான பரிவுள்ளம் மாத்திரம் காரணமல்ல; அவர் தம் வாழ்க்கைத் துணைவியையே கொடிய க்ஷயரோகம் பலி கொண்டு விட்டதும் குறிப்பிட வேண்டியதொன்றாகும்.

ஒவ்வொருவரும் தத்தம் வாழ்க்கையில் எத்தனையோ பாடங்களைப் படிக்கத்தான் செய்கிறார்கள். ஆனால் கற்ற பாடத்தைத் தன் வாழ்க்கையிலேயே கைக்கொள்பவர் எத்தனை பேர்? அதிலும், நோயின் கொடுமையை அனுபவத்தாலுணர்ந்த இவர், இந்தத் தீய நோயை என் குடும்பத்தாரிடத்து மட்டுமல்ல, என் நாட்டாரிடத்திலேயே அணுகவிடமாட்டேன் என்று தரத்தியடிப்பதில்-ஒழிப்பதில் இறங்கியிருக்கிறார் என்றால் இவரின் துணிவுள்ளத்தைக் கண்டு எவரே வியக்காமல் இருக்கமுடியும்?

ஆஸ்பத்திரியின் கௌரவக் காரியதரிசியாக, இவர் இருந்து வரும் இந்த இரண்டாண்டுக்குள்ளாகத் தனிப்பட்டவர்கள் மூலமாகவும் சென்னை செக்ரடெரியேட் பார்ட்டி நாடகத்தின் மூலமாகவும் சுமார் ஒரு லட்ச ரூபாய்க்குமேல் நன்கொடையாகத் திரட்டிப் பல வசதிகளை நோயாளிகளுக்குச் செய்திருக்கிறார் என அறிகிறோம். என்றாலும் அவருடைய குறிக்கோள் நிறைவேற இன்னும் எத்தனையோ லட்சங்கள் தேவை.

மக்கள் நலத்திற்குப் பணச் செலவு செய்யப் பணமில்லாத சர்க்காரைப் பெற்றிருக்கும் நாட்டில், இத்தகைய தனிப்பட்டவர்களின் கைம்மாறு கருதாத் தொண்டு எவ்வளவு அவசியம் என்பதை நாம் வற்புறுத்தத் தேவையில்லை.

இவரின் இந்தத் தொண்டுக்கு நம் நாட்டுச் செல்வவந்தர்கள் கைகொடுத்து உதவுவார்களானால் அவர்கள் ஈட்டிய செல்வமும் பெருமையடையும்! அவர்களும் பெருமையடைய முடியும்! நாடும் ஒரு அளவில் நன்னிலை பெறும்! என்பது உறுதி.

வாழ்க அவரின் தொண்டு!
வெல்க அவரின் முயற்சி!

அறிமுகப்படலம்.

# இவர்தான் காமராஜர்!

★

## முன்னுரை.

தோழர்களே! இப்பொழுது நான் உங்களுக்கு திருவாளர்—மறந்துவிட்டேன், மன்னிக்கவும்—ஸ்ரீ காமராஜரை அறிமுகப்படுத்தி வைக்கப்போகிறேன் என்று தட்டுத் தடுமாறிக் கொண்டு, நானாகவே மேடையில் வந்து பேச முற்படும் பொழுது உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கும். யாரடா! இந்தப் பைத்தியம், காமராஜரை அறிமுகப்படுத்த வந்திருக்கிறான் என்றும் தோன்றும். மேடை வழக்கத்தை ஒட்டி தலைவர் எழுந்து என்பெயரைச் சொல்லி, நான் காமராஜரை அறிமுகப்படுத்தி வைப்பேன் என்று கூறிய பின், நான எழுந்து வந்து 'மைக்'கை கொஞ்சம் உயர்த்திக் கொண்டு—காரணம் நான் கொஞ்சம் உயரமாக இருப்பதுதான்—அறமுகப் படலத்தை ஆரம்பித்தால் என்னையும் உங்களுக்கு இன்னாரென்று புரிந்துவிடும். நானும் அறிமுகப்படுத்த வசதியாக இருக்கும். ஆனால், இது மேடையாக இல்லாததால் என்னை அறிமுகப்படுத்தும்படி பிரரேபிக்க தலைவர் இல்லாத காரணத்தால் நானே அறிமுகப் படலத்தை ஆரம்பிக்கிறேன்.

காமராஜரோ ஒரு சாதாரண மனிதரல்ல. அவரைத் தமிழகம் நன்கு அறியும். ஆகஸ்ட் புரட்சி—காலித்தன—வீரர். பெரிய தியாகி. தமிழ்நாடு காங்கரஸ் கமிட்டித் தலைவர். சி. ஆரை. காங்கரஸ் கமிட்டியில் நாலு அணா மெம்பராகக் கூட இருக்க அனுமதிக்க முடியாதென்று கூறி நாடு சுற்றிப் படை திரட்டிய வீரர். மந்திரி சபையை ஆக்கவும், அழிக்கவும் ஆற்றல் பெற்ற வீரர். இப்படிப்பட்ட காமராஜரை இவன் யாரப்பா அறிமுகப்படுத்த வந்திருக்கிறான் என்று உங்களில் சிலருக்குத் தோன்றலாம்.

அடே அப்பா! இந்தக் காமராஜரையா நமக்குத்தெரியாது? பச்சைத் துரோகியாச்சே. வளமிக்க திராவிடத்தை வடநாட்டானுக்குக் காட்டிக் கொடுத்து பதவி பெற்றுத் திரியும் பதர்தானே? சி. ஆர் ஆகஸ்ட் துரோகி என்று நாடு சுற்றிப்பறை சாற்றினார். ஆனால், அவர் கவர்னர் ஜெனரலானவுடன் அவருடைய பிறந்ததினம் கொண்டாடும்படி அறிக்கை விட்ட பிரகஸ்பதிதானே? சி. ஆர், கவர்னர் ஜெனரலானவுடன் அவர் தமிழ் நாட்டிற்கு முதல் முறையாக வந்தபொழுது அவரை வரவேற்க விமான நிலையத்திற்கு வெட்கமில்லாமல் சென்று, பார்ப்பனப் போலீஸ் அதிகாரியால் பிடரியைப் பிடித்து வெளியே தள்ளப்பட்டு, அங்கே ஒன்றும் செய்ய யோக்கியதை இல்லாமல், அடிப்பட்ட நாய் தூரத்தில் ஓடி குரைப்பதைப்போல், குற்றாலத்தில் வந்து பிரதமர் ரெட்டியாரைச் சமாதானம் சொல்லும்படி அழைத்த சூரப்புலிதானே? இப்படிப்பட்ட இந்த யோக்கியரையா இந்த ஆள் அறிமுகப்படுத்த வரவேண்டும் என்றும் சிலருக்குத் தோன்றலாம்.

நீங்கள், காமராஜரை எப்படித் தெரிந்து கொண்டிருந்த போதிலும் நானும் எனக்குத் தெரிந்தவரை உங்களுக்கு அவரை அறிமுகப்படுத்துகிறேன். சமீப காலத்தில் அவர் தம்முடைய சுற்றுப் பிரயாணத்தில் ஓர் இடத்தில் பேசும் பொழுது 'ராமசாமி நாயக்கர் அரசியலில் புகுந்து குழப்பத்தை உண்டுபண்ணினால அவர் முகமூடியைக் கிழித்து அவரை இன்னாரென்று தெரியப்படுத்திவிடுவேன். அவர் யாரென்று எனக்குத் தெரியும்'' என்று கூறியிருக்கிறார். உண்மையிலேயே அவர் குறிப்பிடும் நாயக்கர் யார் என்பதை அவர் நன்றாக உணர்ந்திருந்தால் அப்படிப் பேசியிருக்க மாட்டார். மேலே கண்ட அவரது பேச்சிலிருந்து அவருடைய வீரத்தை (!!) நீங்கள் ஓரளவு புரிந்து கொண்டிருப்பீர்கள். ஒரு வேளை 'குத்தூசி'யார் கூறிய பிச்சைக்காரன் கதை ஞாபகத்திற்கு வந்தாலும்வரும். திரையைக் கிழிக்க தெம்பிருந்தால் கிழிக்கட்டும். வெத்து வேட்டு விடுவதில் பயனில்லை. இப்படிக் குரைக்கின்ற நாயா கடிக்கப் போகிறது?

காமராஜர், தலைவர் பெரியாரின் முகமூடியைக் கிழித்துவிடுவேன் என்று பிதற்றுகிறார். அவர் முகமூடி அணிந்து கொண்டிருக்கவும் இல்லை, இவரால் கிழிக்கவும் முடியாது. ஆனால், காமராஜர் போர்த்திக் கொண்டிருக்கும் 'தியாக'ப் போர்வையைச் சற்று விலக்குகிறேன், அப்பொழுது பாருங்கள் அவர் யாரென்பது நவகு தெரியும். தமிழ் நாடு காங்கரஸ் கமிட்டித் தலைவர் என்ற செல்வாக்கைப் பயன்படுத்திக் கொண்டு அவர் நடத்திவரும் திருவிளையாடல்கள் நன்கு தெரியும். கீழே தரப் போகும் சுவையான—ஆச்சரியமிக்க விஷயங்கள் நானாக இட்டுக்கட்டிக் கூறுபவைகள் அல்ல. 1946-ல் திருச்சி ஜில்லா திண்ணனூரில் தமிழ் நாடு காங்கரஸ் கமிட்டி கூடியபொழுது, அதில் வெளியிடுதவற்காக காமராஜருக்கு ஒரு பகிரங்கக் கடிதம் தயாரிக்கப்பட்டது. அதிலுள்ள சில விஷயங்களை இங்கு குறிப்பிடுகிறேன். அந்தக் கடிதத்தைத் தயாரித்தவர்கள் கருப்புச் சட்டையினர் அல்ல; கதர்சட்டையினர் தான். சாதாரண ஊழியர்கள் அல்ல; மாஜி மாகாண காங்கரஸ் கமிட்டி அங்கத்தினர்களும், தியாகத் தொண்டர்களும் தான். இப்படியிருந்தும் கடைசியாக அந்த பகிரங்கக்கடிதம் 23-கேள்விகளையுடையது—அச்சிடப்பட்டும் வெளியிடப்படாமல் போய்விட்டது. தனக்கு ஒரு பகிரங்க கடிதம் தயாரிக்கப்பட்டிருப்பதை அறிந்த காமராஜர், தயாரித்தவர்களை அழைத்து ஏதோ சமாதானம்கூறி அச்சான அவ்வளவு காகிதங்களையும் வாங்கித் தீயிட்டு எரித்து விட்டது தான் காரணம். இந்த யோக்கியர் தான் பெரியாரின் முகமூடியை கிழிக்கப்போகிறாராம்.

## விமர்சனப் படலம்!

காமராஜரும், காங்கரஸ்காரர்களும் நம்மை வகுப்புவாதிகள் என்று கூறத் தயங்குவதில்லை. இதோ அவருடைய யோக்கியதையைப் பாருங்கள்.

1. காமராஜர் ஆகஸ்ட் காலித்தனத்தின்போது சிறையிலிருந்த காலத்தில் பக்தவத்சலத்தின் உதவியுடன் சி. ஆர். எதிர்ப்பு முன்னணியை பார்ப்பனா—பார்ப்பனர் அல்லர்தார் என்ற பிரச்னையை அடிப்படையாகக்கொண்டே ஆரம்பித்தார். (இல்லாவிட்டால் அதில் அவர் வெற்றி பெற்றிருக்க முடியாது)

2. ஆகஸ்ட் காலித்தனத்தின் காரணமாக கைது செய்யப்பட்டிருந்தவர்கள், வெளியில் வந்தவுடன், காங்கரஸ் சட்டசபை தேர்தலில் கலந்துகொள்ள தீர்மானித்தது. உடனே காமராஜர் ஒரு ரகசியக் கூட்டத்தை தன் தலைமையில் மதுரையில் கூட்டி அதில் ''பிராமணர்களை காங்கரஸ் கமிட்டிகளிலிருந்தும், சட்டசபை போன்ற ஸ்தாபனங்களிலிருந்தும் கூடிய மட்டில் விலக்கிவிடுவது'' என்று தீர்மானித்தார். ஆனால் இப்பொழுது அந்தத்தீர்மானத்தை வாபஸ் வாங்கிக் கொண்டிருக்கிறார். காரணம் நமக்கும் புரியவில்லை. ஒரு வேளை தம்முடைய தலைமைப்பீடம் ஆட்டங் கொடுக்கும் பொழுது, பெருவாரியான திராவிட காங்கரஸ் கமிட்டி அங்கத்

(தொடர்ச்சி 11ம் பக்கம் பார்க்க)

ராஜா முத்தையா

இங்கர்சால் சொற்பொழிவு.

# ஒரு நன்றி கூறும் நடப்பு!

தமிழாக்கம்:— நெடுஞ்சேரலாதன்.

ஆலயம் என்ன நன்மை செய்துள்ளது?

ஆயிரக்கணக்கான அவைகளும், கூட்டங்களும் கூடின. அவற்றில் ஆயிர ஆயிரக்கணக்கான சமயங்களிலே மடாதிபதிகள், வாதித்தும் போரிட்டும் இருக்கின்றனர். அச்சமயங்களிலே போப்புகள், குருக்கள், பிசப்புகள், பாதிரிகள் தங்கள் கொள்கைகளை விரித்தும், கூட்டியும் கூறி, மற்றவர்களின் உரிமைகளைப் பிடுங்கி இருக்கின்றனர். அப்படிப்பட்டவர்கள் என்ன பயனுள்ள உண்மைகளைக் கண்டுபிடித்தனர்? என்ன உண்மைத் தத்துவத்தை அவர்கள் கண்டுபிடித்துவிட்டனர்? ஏதாகிலும் கண்டுபிடித்து, உலக அறிவுச் செல்வத்தோடு கூட்டியிருக்கின்றனரா? அறிவை வளர்க்க முயன்று இருக்கிறார்களா?

அவர்கள் பல யூதபுத்தகங்களை ஊடுருவி நோக்கி, 'ஜெஹோவா' எழுதிய புத்தகத்தைத் தெரிந்தெடுத்ததை மட்டும் நான் ஒப்புக்கொள்கிறேன்.

வித்துக்களிலும், மலர்களிலும் வதியும் மருத்துவத் தத்துவங்கள் எதையாகிலும் கண்டுபிடித்திருக்கிறார்களா?.

புனித ஆவி (Holy Ghost) உண்டாக்கப்பட்டதல்லவென்றும், கிடைக்கப்பட்டதல்லவென்றும், அது என்றும் இருப்பது என்றும் அவர்கள் எண்ணிக்கொண்டிருப்பது எனக்குத் தெரியும்.

உலோக தத்துவ அதிசயங்களை, அவைகளை இரசாயனச் சூடரிலே எங்கனம் தூய்மைப்படுத்துவது என்பதைப்பற்றி அவர்கள் போதித்து இருக்கின்றனரா?

"கடவுட்தன்மையே பேரதிசயம்" என்று அவர்கள் சதா கூவிக்கொண்டிருக்கின்றனர்.

நம் நிலையை எங்கனம் திருத்திக்கொள்வது என்று அவர்கள் வழிகாட்டியதுண்டா?

கிறிஸ்துவுக்கு இரு இயற்கையும், இரு மனமும் உண்டு என்று அவர்கள் அறிவுறுத்தினர்.

பயனுள்ள காரியத்துக்காக அவர்கள் ஒரு வார்த்தையாவது கொடுத்ததுண்டா?

முடிவைப் பற்றிய எச்சரிக்கையையும், வருங்கால நிலையையும் கூறி, நரகம் செல்வதற்காக அவர்கள் நமக்கு "மன உரிமை" (Free will) கொடுத்துள்ளார்கள்.

அவர்கள் உணவு உற்பத்தி எப்படி என்று கண்டுபிடித்தோ, வழிகாட்டியோ இருக்கின்றார்களா?

மனிதப் பசியைத் தீர்க்க அவர்கள் ஏதாகிலும் உற்பத்தி செய்ததுண்டா?

இவைகளைக் கண்டுபிடிப்பதற்குப் பதிலாக, பாலஸ்தீன நாட்டில் வாழ்ந்த ஒரு ஏழைப் பெண்ணை, இவள்தான் கடவுளின் தாய் என்று கண்டுபிடித்துக் கூறினார்கள். இதை நிலைநாட்டப் புத்தகங்களிலே எழுதி, அந்தப் புத்தகம் புனிதமானது என்று கூறினர்.

உலோக சரித்திரத்தை (தத்துவத்தை) கூறி, எங்ஙனம் ஒன்றையொன்று கூட்டுவது, எங்ஙனம் கழிப்பது, எங்ஙனம் பயனற்றவைகளை நீக்குவது, பயனுள்ளவைகளைப் பெருக்குவது என்பதைப் பற்றி அவர்கள் ஏதாகிலும் கூறியதுண்டா?

ரொட்டியை ஒரு சில அசைப்பினாலும் பிரார்த்தனை உச்சரிப்பாலும், கடவுளின் தசையாகவும்; அவ்விதமாகவே மதுவைக் கடவுளின் குருதியாகவும் மாற்றலாம் என்று அவர்கள் கூறினர். இது கடவுளின் இலக்கணத்துக்கு மாறாக இருப்பதோடல்லாமல், உடலோ, குருதியோ அற்ற ஆவி வடிவான, விருப்போ, வெறுப்போ அற்ற கடவுள் தன்மையை மாற்றிவிட்டது.

இன்னும் ஆலயம் என்ன செய்துள்ளது?

அது உலக சரித்திரத்தை—தாரைக்கூட்டம் முதல் எல்லா உலகப் பொருளின் ஆரம்ப சரித்திரத்தையும் கூறி இருக்கிறது. மோசேயின் பூதத்துவமும், எலிசா, ஜோசுவாவின் வானசாத்துவத்தையும் போதித்து இருக்கிறது. மனிதத்தாழ்வின் காரணத்தையும், ஒரு ஏழை யூதனைக் கடவுளாகவும், நரக, மோட்ச வழிகளை நிலைநாட்டவும் போதித்து இருக்கிறது.

ஆலயம் ஆண்டவன் சொல்லால் உற்பத்தியானது என்றும், மனிதன் கடக்கவேண்டிய வாழ்க்கைப் பாதையில் பெறவேண்டிய எல்லா அறிவும், வேத புத்தகத்தில் இருப்பதாகவும் பாவனை செய்திருக்கிறது. பக்தியும், பிரார்த்தனையுந்தவிர வேறு எதுவும், புனித புத்தகத்திலே மதிக்கக்கூடியவையாய் இருக்கவில்லை. விவிலிய நூலுக்கு (Bible) எதிரான புத்தகமெல்லாம் ஆபத்தானவை. விவிலிய நூலுக்கு ஆதாரமானவை எல்லாம் பயனற்றவையாகும். பக்தி, குருாம், நம்பிக்கை, இவைகளைதவிர வேறு முக்கியமானவை ஏதும் அதில் இல்லை. "வேதாந்தங்களே உங்கள் எண்ணத்தில் இருக்கட்டும். வினா விடுக்காதீர்கள், முழந்தாளிலே இருங்கள். கண்ணை மூடிக்கொண்டு ஆத்மாவைக் காப்பாற்ற முற்படுங்கள்" என்று ஆலயம் அறைகிறது.

ஆலயம் வேறு என்ன செய்துள்ளது?

பல நூற்றாண்டுகளாக உலகைத் தட்டையாகக் காட்டியும், வானுலக விருந்தாளிகளைப் பூலோகத்தில் யாத்திரை செய்யவைத்தும், உண்மையைப் 'புனிதம்' என்ற பெயரிலே பயங்கர எதிர்ப்புச் செய்தும் வந்திருக்கிறது. பல நூற்றாண்டுகளாகப் பயனுள்ளவைகளை வெறுத்து இருக்கிறது. மருத்துவத்தின் பரம வைரியாக இருந்திருக்கிறது. பிசாசுகளினால் தான் நோய் உண்டாக்கப்படுவதாகவும், புனித நீரை எலும்பிலெடுத்துத் தெளித்துப் பாதிரிகளால் தான் சுகப்படுத்த முடியும், என்றும் நம்பச்செய்து வந்திருக்கிறது. மருத்துவர்கள் குருமார்களின் போட்டியாளர்கள். அவர்கள் துரைத்தனத்தாரால் விரட்டப்பட்டனர்.

உடற் கூற்றுப்படிப்பை ஆலயம்

(தொடர்ச்சி 10-ம் பக்கம்)

## ஏஜண்டுத் தோழர்களுக்கு.

31—3—49 தேதி முடிய வருஷக் கணக்கு முடிவுகட்ட வேண்டியிருக்கிறது.

ஏஜண்டுத் தோழர்கள் தயவு செய்து இம்மாத பில் தொகையை 5-4-49 தேதிக்குள் தவறாமல் அனுப்பி வைக்க வேண்டுகிறோம்.

மானேஜர்.


# குடி அரசு

26—3—49 சனிக்கிழமை.


## முதல் மந்திரியும்—நிதி மந்திரியும்.

திராவிடக் கழகத்தையும், கருப்புச்சட்டையையும்பற்றி இந்த ஒரு ஆண்டுக்காலமாக மந்திரிகள் பேசும் ஒவ்வொரு கூட்டங்களிலும், சட்டசபை அங்கத்தினர்கள் பேசும் ஒவ்வொரு கூட்டத்திலும், சட்டசபை கூடும் ஒவ்வொரு கூட்டச் சமயத்திலும் ஏதாவது ஒரு வகையில் குறைகூறியும், தாக்கியும் பேசிக்கொண்டே வருகிறார்கள்.

திராவிடக் கழகத்தார் இந்தியை எதிர்த்துப் பிரச்சாரம் செய்வதும்,

இந்துஸ்தான் அரசாங்க ஆதிக்கத்திலிருந்து திராவிடநாடு தனிச் சுதந்திர நாடாகப் பிரிந்திருக்க வேண்டும் என்று பிரசாரம் செய்வதும்,

மத, சமுதாயத்துறைகளில் மூடநம்பிக்கைகளும் வருணாச்சிரம முறைப்படி ஆன ஜாதிப்பிரிவுகளும் பேத வகைகளும் ஒழிய வேண்டும் என்றும்,

இவை ஒழியும்வரை, மக்கள் எண்ணிக்கை விதம் வகுப்புவாரிப் பிரதிநிதித்துமும், உரிமையும் இருக்கவேண்டும் என்றும்,

பிரச்சாரம் செய்துவருவதும் யாவரும் அறிந்ததேயாகும். இதில் திராவிடக் கழகத்தார் சிறிதும் ஒழிவு, மறைவு இல்லாமல் பிரச்சாரம் செய்துவருவதோடு, தங்கள் பிரச்சாரங்களில் சிறிதும் பலாத்காரமோ, பலாத்கார உணர்ச்சியோ ஏற்படுவதற்கு இடம் இல்லாமல் சாந்தமும், சமாதானமும் ஆன தன்மையிலேயே பிரச்சாரம் செய்து வருகிறார்கள்.

அன்றியும், திராவிடக் கழகத்தார் திராவிட நாட்டில் உள்ள எந்த வகுப்பார் மீதும் துவேஷம் உண்டாகும்படியோ, பலாத்காரத்துக்கு யாரையாவது ஏவிவிடும்படியாகவோ பிரச்சாரம் செய்வதும் இல்லை.

இவைகளுக்கு ஆதாரம் சர்க்கார் சி. ஐ. டி. ரிப்போர்ட்டுகளே சாட்சி கூறும்.

மற்றும் இன்று இந்துஸ்தானத்தில் நடைபெறும் சுயராஜ்ஜிய சர்க்காரைக் கவிழ்க்கவோ, பலாத்கார முறையில் மாற்றவோ திராவிடக்கழகம் ஒரு சிறிதும் முயற்சிக்கவோ, கருதவோ இல்லை.

பலாத்காரம் இல்லாமலும், அரசாங்கத்தைக் கவிழ்க்கும் நோக்கம் இல்லாமலும், உண்மையான விஷயங்களைப் புள்ளி விவரங்களுடனும், அனுபவபூர்வமாகவும் மக்களுக்கு எடுத்துச்சொல்லி, மக்களுக்கு மனமாற்றம் உண்டாக்கி, தங்கள் நியாயமான திட்டத்தை நிறைவேற்றிக் கொள்ளவே முயற்சித்து வருகிறார்கள்.

இந்தப் படியான முயற்சியையும் பிரச்சாரத்தையும் பெரும்பாலும் பிரிட்டிஷ் அரசாட்சி அனுமதித்து, பரிகாரம் செய்து வந்திருப்பதை இன்றைய அரசாங்கமும், மற்றும் எந்த வகுப்பாரும், எந்தக் காங்கரசுக்காரரும் மறுக்கவே முடியாது. அப்படியிருக்க இன்றைய சுயராஜ்ஜிய—சுதந்தர—ஜனநாயக ஆட்சி என்று பறைசாற்றப்படுகிற இந்நாள் அரசாங்கத்தில் இதை அநுமதிக்கமுடியாதென்றாவது, யாரும்பிரச்சாரம் செய்யக்கூடாதென்றாவது சொல்ல முன்வந்தால் அதை சுதந்தர—ஜனநாயகத் தன்மை கொண்டது என்று யார்தான் சொல்ல முடியும்?

திராவிடக் கழகத்தார் திராவிட நாட்டில் திராவிட மக்களுக்கு வடநாட்டு ஆரியமொழியாகிய இந்தி மொழியை கட்டாயமாகக் கற்பிக்கக்கூடாது என்றால், அதைச் சர்க்கார், இது திராவிடப் பொது மக்கள் கருத்தா, அல்லது யாரோ ஒரு சிலருடைய சுயநலக் கருத்தா, அல்லது விஷமத்தனமாகத் தொல்லை கொடுக்கும் கருத்தா என்பதாகப் பரிசீலனை செய்துபார்த்து அதன் மீது வேண்டுமானால் பிரச்சாரக்காரரைக் குறை கூறலாம். அந்தப்படி பரிசீலனை செய்யாமல், "சர்க்கார் திட்டத்தையாரும் எதிர்க்கக்கூடாது, சர்க்கார் சொன்னபடிதான் மக்கள் நடக்க வேண்டும்தடைசொல்லக்கூடாது" என்றால்,சர்க்கார் மீது மக்களுக்கு அதிருப்தியும் வெறுப்பும் ஏற்படாமல் எப்படி இருக்க முடியும்?

இந்தி சர்க்காரால் தமிழ்நாட்டில் கட்டாயமாய்ப் புகுத்தப்பட்டிருப்பதற்கு, சர்க்கார் சார்பில் கல்வி மந்திரியார் இப்போது எவ்விதச் சமாதானமும் சொல்ல வருவதில்லை. ஆனால் அவருக்குப் பதிலாக முதல் மந்திரியார் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு சமாதானம் கூற முன் வருகிறார்.

அப்படிச் சொல்லும் சமாதானங்களில், தலை சிறந்த சமாதானம் என்னவென்றால்

"இந்தி தேசீய மொழியாக ஆக்கப்படப் போவதால், யாவரும் இந்தி படிக்கவேண்டும்" என்பதாகும்.

அப்படியானால் ஒரு மொழி தேசீய மொழியாக ஆக்கப்பட வேண்டுமென்றால், அந்நாட்டு மக்களின் சம்மதம் அதற்குத் தேவையில்லையா?

இந்தியைத் தேசீய மொழியாகத் தமிழ் நாட்டில் ஆக்கக்கூடாது என்கின்ற எதிர்ப்பு 1938 லேயே ஏற்பட்டு, தடை செய்யப்பட்டுவிட்டது. இப்போது மறுபடியும் அப் பிரச்னை கிளம்ப வேண்டிய அவசியம் ஏற்படவே இல்லை. அப்படி இருக்க, இப்போது சிறு குழந்தைகள் இந்தியைக் கட்டாயமாகப் படித்து ஆக வேண்டும்என்று செய்யப்பட்டிருப்

பது எப்படி ஜனநாயகமாகும்?

இந்தி தேசிய மொழி ஆவதைத் திராவிட மக்கள் தடுப்பதற்குக் காரணம், இந்துஸ்தான் ஆட்சியிலிருந்து திராவிட நாடு பிரிய வேண்டுமென்கின்ற போராட்டம் இருக்கும்போது, அப் போராட்டக்காரர்கள் இந்தியைத் தேசிய மொழியாக எப்படி ஒப்புக்கொள்ள முடியும்? திராவிட நாட்டைப் பிரித்துக் கேட்பது குற்றமான காரியம் என்று சட்டம் செய்துகொண்டு, பிறகு வேண்டுமானால் அப் பிரச்சினையைச் சட்டவிரோதமாக ஆக்கிவிட்டு, அப்புறம் வேண்டுமானால் இந்தியை நுழைக்கலாம். அதுவும் கட்டாயப்படுத்தவேண்டிய அவசியமில்லை. அந்தப் பிரச்னை தீராமல் கட்டாயப்படுத்துவது, ஒரு நாளும் பொதுமக்களால் ஒப்புக்கொள்ளப்படமாட்டாது.

அடுத்தபடியாகத் "திராவிடநாட்டைத் தனியாகப் பிரிப்பதற்குத் திராவிட நாடு தகுதியற்றது" என்பதாக முதன் மந்திரியார் கூறுகிறார்.

திராவிட நாடு 5 கோடி மக்களைக் கொண்டதென்றும், பாகிஸ்தான் நாட்டுக்கு இருக்கிற தகுதியைவிடப் பலமடங்கு அதிக வசதியும் தகுதியும் உடையது என்றும் பலதடவை எடுத்துக் காட்டியிருக்கிறோம்.

அடுத்தபடியாக "திராவிடநாடு கடல் சூழ்ந்தநாடு ஆதலால் அதற்குக் கடற்படை வேண்டாமா?" என்கிறார் முதன் மந்திரியார்.

இதற்கு நாம் "எதிர்கால ஒப்பந்த முறைப்படி திராவிட நாட்டில் கடற்படை வைக்கவேண்டிய அவசியமே இருக்காது" என்னலாம். அப்படி அவசியம் ஏற்பட்டாலும் சுமார் 1500 மைல் கடற்கரையுள்ள திராவிட நாட்டுக்குப் பாதுகாப்புக் கடற்படையை ஏற்படுத்திக் கொள்ள திராவிடர்களுக்கு ஏன் முடியாமல் போகும்? திராவிடநாடு மற்றத் துறைகளிலும் தனித்திருக்க முடியாத அளவுக்கு என்ன குறைக்கு ஆளாக இருக்கிறது?

கடல் வியாபாரம், உள்நாட்டு வியாபாரம், யந்திர சாதனம், விவசாயம், விளைபொருள், ஆறு, மலை, தண்ணீர்த் தேக்கம், பொருளாதாரம், தொழில் திறம் முதலாகிய எதில் திராவிட நாடு, மற்ற எந்த நாட்டிற்காகிலும் குறைவானதென்று, யாராலாவது சொல்ல முடியுமா?

திராவிட நாட்டுக்குத் தனிச் சுதந்தரம் பெறத் தகுதி இல்லை என்று முதல் மந்திரியார் எந்த அனுபவத்தின் மீது, ஆராய்ச்சியின் மீது சொல்லுகிறார் என்பது நமக்கு விளங்கவில்லை.

திராவிடக் குழந்தைகளுக்கு இந்தி எளிதாகப் படிக்க முடியுமா? திராவிடக் குழந்தைகள் 100-க்கு 90 குழந்தைகள் தமிழ்ப் படிக்க இன்றைக்கும் சென்னை அரசாங்கத்தில் எவ்வித வசதியுமே செய்யப்படவில்லை. வருஷம் 1க்கு பத்துக்கோடி ரூபாய் கல்விக்கு என்று நமது மாகாணத்தில் திராவிட மக்கள் பணம் செலவாகி வந்தும், வரி கொடுப்போரின் பிள்ளைகள் எல்லாம் படிக்க வசதி செய்யாமல் ஒரு சில பிள்ளைகளுக்கே, கல்வி வசதி செய்து கொடுத்து விட்டு, அந்தப் பிள்ளைகளையும் வடமொழியைக் கட்டாயமாகப் படி என்றால், இந்தக் கல்வி முறை ஜனநாயகத்துக்கு ஏற்றதா? அல்லது ஒரு வகுப்பு நாயகத்துக்கு மாத்திரம் ஏற்றதா? என்பதை முதல் மந்திரியார் நடு நிலைமையிலிருந்து சிந்தித்தால் விளங்காமல் போகாது.

இவை தவிர, இந்தியின் அவசியத்துக்கு மந்திரியார் மற்றொரு காரணமும் கூறுகிறார். அதாவது திராவிட மக்கள் திராவிட நாட்டில் உத்தியோகம் பெற வேண்டுமானால் இந்தியைப் படித்தே ஆகவேண்டும் ஆதலால் இந்தியைக் கட்டாயமாகப் படிக்க வேண்டு வேண்டுமென்கிறார்.

இது வெள்ளையர் காலத்தில் திராவிடர்களுக்கு உத்தியோகத் தகுதி இல்லாமல் செய்வதற்கு, "உத்தியோகத்துக்கு இங்கிலீஷ் படிக்க வேண்டும்" என்று காங்கரசின் மூலம் பார்ப்பனர் செய்த சூழ்ச்சி போலவே, இப்போதும் பார்ப்பனர்களுக்கு மாத்திரம் வசதியும், வாய்ப்பும் உள்ள இந்தியைப் படித்தாக வேண்டுமென்று செய்யும் சூழ்ச்சியே தவிர மற்றப்படி உத்தியோகத்திற்கும், இந்திக்கும் என்ன சம்பந்தம் என்று கேட்கிறோம்.

தமிழ் நாட்டில் தமிழர்கள் உத்தியோகம் பார்க்க, இந்தி படிக்க வேண்டுமென்பது தமிழனுக்கு இழிவும் மானக்கேடுமான காரியமல்லவா என்று கேட்கிறோம்.

இந்திமொழியில் உத்தியோகக் காரியத்துக்கு வேண்டிய அறிவோ, அனுபவமோ பெற என்ன இருக்கிறது என்று கேட்கிறோம்.

இன்றைய நிலையில் இன்னும் 20 ஆண்டுகளுக்கு சட்டம், வைத்தியம், இஞ்சினீரிங், விஞ்ஞானம் முதலிய காரியங்களுக்கு இங்கிலீஷ் இல்லாமல் ஒரு காரியமும் செய்ய முடியாது என்பதாக அந்தந்தத் துறை நிபுணர்கள் கூறிவிட்டார்கள். ஏனெனில் இந்த நாட்டில் இந்தத் தத்துவங்கள் ஆங்கிலத் தத்துவத்தை அடிப்படையா கொண்டு நடந்துவந்து அதே பழக்கத்தையும், உணர்ச்சியையும், அநுபவத்தையும் உண்டாக்கிவிட்டதால் அதைப் புறக்கணிக்கவோ, அதற்குப் பதிலாக இந்தியை ஏற்கவோ முடியாத நிலையில் இருக்கிறோம். அன்றியும் இந்தி மனிதனின் பகுத்தறிவைப் பாழாக்கி மந்தத் தன்மையைப் புகுத்திவிடுவதோடு காட்டு மிராண்டிக் காலத்துக்குச் செல்லவே வழிகாட்டும்.

ஆங்கிலம் படித்த ஒரு தமிழ் நாட்டானுக்கு இருக்கும் அறிவில், சமத்தில் 4ல் ஒரு பங்கு உள்ள மனிதனை வடநாட்டில் காண்பது அரிது. இதைக் கவர்னர் ஜெனரல் சி. ஆர். அவர்களே சொல்லி இருக்கிறார். எனவே தமிழ் நாட்டுக்கு அல்லது திராவிடத்துக்குஆங்கிலமும், பிரதேசமொழியுமேபோதுமானதாகும். தேவைப்பட்டால் தேவைப்பட்டவர்கள் தேவையான காரியங்களுக்குத் தனியாகக் கற்றுக் கொள்ளுவதை நாம் தடுக்கவில்லை.

நமது வரியில் வருஷம் 1-க்கு 10 கோடி ரூபாய் ஒரு பயனற்ற அன்னிய மொழிக்கு எதற்காகச் செலவு செய்ய வேண்டும்? எஸ். எஸ். எல். சி. வகுப்பிலிருந்து துவக்குவதில் நமக்கு ஆட்சேபனையே கிடையாது.

நம் பிள்ளைகளில் 100க்கு 75 பேர் எஸ். எஸ். எல். சி. க்கு முன்பதாகவே பள்ளியை விட்டு விடுவார்கள். அவர்களுக்கு வெளி மாகாணத் தொடர்பு தேவையே இருக்காது. குறைந்தது உத்தியோகத்துக்கு எஸ். எஸ். எல். சி. யாவது தேவையிருக்கும் ஆதலால் அந்த வகுப்புக்கு வைத்துக்

கொள்வதுதான், உத்தியோகத்தைக் கருதி என்றாலும் அறிவுடைமையாகும்.

தவிர, இந்தி எதிர்ப்புப் பிரச்சாரத்தின் மூலம் வகுப்புத்துவேஷம் வளர்க்கப்படுகிறது என்கிற அவருடைய பேச்சும் எந்த வகையில் நியாயமானது?

வகுப்புத் துவேஷம், வருணாச்சிரம தர்மம், ஜாதி உயர்வு தாழ்வு, மூட நம்பிக்கை முதலிய பிற்போக்கான நிலையை ஸ்திரப்படுத்தி வைக்கும் இந்தி மொழியை— சமஸ்கிருதத்தின் மறு பதிப்பைப் பார்ப்பனர்கள் எப்படியாவது திராவிட நாட்டில் புகுத்திவிட வேண்டுமென்று திட்டமிட்டு, அதற்கு ஆன வேலைகளைச் செய்து கொண்டுவருவது வகுப்புத் துவேஷமா? வகுப்புத் துவேஷம் முதலிய பிற்போக்கான நிலையை, நிலைக்கவிடக்கூடாது — அதற்கு ஆதாரமான இந்தி மொழியை இந்த நாட்டில் கட்டாயமாகப் புகுத்தக்கூடாது என்று இந்த நாட்டு மக்கள் கூறுவது வகுப்புத் துவேஷமா? என்பதையும் மந்திரியார் நடுநிலைமையோடு நின்று பார்த்தால் விளங்காமல் போகாது.

மேலும், வகுப்புத் துவேஷம் என்பதை இந்த நாட்டில் யார் புகுத்தியது? யார் கையாண்டு வருவது? அதனால் யாருக்கு லாபம் வந்துகொண்டிருக்கிறது? என்பவைகளை யெல்லாம் அனுபவசாலியான முதல் மந்திரியார் மறந்துவிட்டு, எதிர்ப்புக் காரர்களால் வகுப்புத் துவேஷம் வளர்க்கப்படுகிறது என்று கூறினால் அது எப்படிப் பொருத்தமும் நாணயமுமான பேச்சாக இருக்கமுடியும்?

இந்த வகுப்புத்துவேஷ வளர்ச்சியைப்பற்றி, இவரின் சகாமந்திரியான நிதி மந்திரியார் இந்த மாதம் 16-தேதிதான் சட்ட சபையில் தன்னுடைய தீர்ப்பு இது என்று கீழ்க்கண்டபடி கூறியிருக்கிறார்.

“வகுப்புத்துவேஷம் உண்டாக்கப்போவது வகுப்புத்துவேஷத்தையே தான். இது துர்மார்க்கமானதாகும். இந்த வகுப்புத் துவேஷத்துக்கு யார் பொறுப்பு? பிராமணரல்லாதவரா பிராமணர்களா என்று கேட்கலாம். என்னுடைய தீர்ப்பு இந்த வகுப்புத் துவேஷத்தை உண்டாக்கியவர்கள் பிராமணர்கள் தான்”

இந்தப்படி, வகுப்புத் துவேஷத்துக்குக் காரணஸ்தர்களாயிருப்பவர்கள் யார் என்பதை மற்றொரு மந்திரியாரே வற்புறுத்திக் கூறுகிற போது, இந்தி எதிர்ப்புக்காரர்கள் வகுப்புத் துவேஷத்தைத் தூண்டுகிறார்கள் என்கிற குற்றச்சாட்டு நியாயமானதா? பொருந்துமா? உண்மையா? என்று அவரையே யோசித்துப்பார்க்கும்படி விட்டுவிடுகிறோம். உச்சிக் குடுமியும், பூணூலும், தனிச்சலுகை கேட்பதுமே வகுப்புத் துவேஷத்துக்கு மாறாத சின்னங்களாக இருக்கும் போது, நம்மீது முதல் மந்திரியார் இப்படிக் கண்ணை மூடிக் கொண்டு பழி தூற்றுவாரென்றால் அது யாருடைய கோளாறு? முதல் மந்திரியார் கூற வேண்டிய இந்தத் தீர்ப்பை நிதி மந்திரியார் வாயிலிருந்துகேட்கும் போது—முதல் மந்திரியார் மற்றொரு புறம் இதற்கு மாறுபாடாகப் பேசுவதைக் கேட்கும் போது, பரிதாபத்துக்குரிய அவர் நிலைமையைக் கண்டு நாம் உண்மையிலேயே வெட்கப்படுகிறோம்.

---

## வருந்துகிறோம்.

நமது ஈரோட்டுத் தோழர் ஆர். டி. முத்து அவர்களின் தந்தையார் திரு. ஆர். துரைசாமி நாயக்கர் அவர்கள், இந்த மாதம் 18ம் நாளிரவு திடீரெனத் தமது 76வது வயதில் நல்ல நிலைமையில் படுத்த சில மணிக்குள், மார்வலியால் இயற்கை எய்தினார் என்கிற சேதி கேட்டு வருந்துகிறோம்.

---

(7ம் பக்கத் தொடர்ச்சி)

கள் வெறுத்தன, அவைகள் மடிந்தவைகளோடு சேர்க்கப்பட்டவையாம். மனிதனுக்கு நோய்களைச் சுகப்படுத்த உரிமையில்லை, கடவுள் அதைக் குருமார்கள் மூலமாகச் செய்யும் எனச் செப்பிவந்துள்ளது.

மனிதனுக்கு நோய் வராது தடுத்துக்கொள்ள உரிமை கிடையாது; அவைகள் ஆண்டவனால் தண்டனையாக ஏற்படுத்தப்பட்டதாகும் என்ற எண்ணத்தை நிலைநிறுத்தி வந்திருக்கிறது.

ஆலயம், ஊசி குத்துவதையும், அம்மை குத்துவதையும், மயக்க மருந்தையும், பொருமி எழுப்பும் மருந்தையும் உபயோகிக்கக் கூடாது எனத் தடை விதித்துவந்திருக்கிறது. இவைகள் பாப காரியங்கள் எனக் கூறிவந்திருக்கிறது. பெண், தன் பிரசவ வேதனையைக் குறைத்துக்கொள்வது பாபம் என்று கூறிவந்துள்ளது. ஜுஹோவாவின் கருணை மிகுந்த சாபத்திற்குப் பெண் இலக்காகியே தீர வேண்டும் என்று கூறிவந்துள்ளது.

இன்னும் ஆலயம் என்ன செய்துள்ளது?

பைத்தியமெல்லாம் பிசாசின் செய்கையாகும். பைத்தியம் நோயல்ல, அது பிசாசினால் உண்டாக்கப்பட்டது என்று நம்பச் செய்து வந்தது. அது பிரார்த்தனைகளாலும், தெய்வப் பிறப்பாலும், ஒத்துப்போவதாலும், அழகாலும் நீக்க முடியும். இவைகட்கெல்லாம் காணிக்கை செலுத்தியாகவேண்டும். காணிக்கை கோயிலைச் செல்வத்தில் திரளச் செய்கிறது.

இவ்வெண்ணமெல்லாம், புராடஸ்டன்ட், கத்தோலிக்கர், லூதர், கால்வின், நாக்ஸ், வெஸ்லி முதலிய எல்லா மதப் பிரிவினராலும், உண்மையாக ஒப்புக்கொள்ளப் படுகிறது.

ஆலயம்என்ன செய்துள்ளது?

கேவல மந்திரங்களை போதித்து இருக்கிறது; இருளை வேதாளங்களாலும், காற்றைபிசாசுகளாலும், உலகை வருத்தத்தாலும், வெட்கத்தாலும், நிரப்பிவிட்டிருக்கிறது. ஆண், பெண், குழந்தைஎல்லோரும் சாத்தானுடன் சேர்ந்துதுணைத் தோழர்களைக் கெடுக்கின்றனர் என்று குற்றம் சாட்டியது. கடலிலே புயலை உண்டாக்கியதாகவும், மழைவராது தடுத்ததாகவும், பஞ்சத்தை கொண்டுவந்ததாகவும், கிழவிகளை குற்றம் சாட்டியது. பெண்கள், ஓநாய் பாம்பு தேளைகளாக மாறியதாகக் குற்றம் சாட்டியது. நோய்களின் காரணத்துக்காகவும், ஆத்மாவை விற்பனை செய்ததற்காகவும், நறவினைப் புளிப்பாக்கியதற்காகவும், மந்திரவாதிகள் தீயிலேஎரிக்கப்பட்டனர். இவையெல்லாம் ஆண்டவனின் அன்புமிக்க ஆட்டுகுட்டிகளை (மக்களை) சாத்தானின் பிடியினின்றும் நீக்குவதற்காகச் செய்யப்பட்டதாம். ஆலயத்தை ஏமாற்ற, சாத்தான் எத்தனையோ வழிகளில் முயன்று கொண்டிருக்கிறதாம். சில சமயங்களிலே பாதிரிமார்கள் உருவில் தோன்றிப் பல தவறுகள் இழைத்துள்ளதாம். (தொடரும்)

(6ம் பக்கத் தொடர்ச்சி)

தினர்களை எய்ப்பதற்காக இப்படி நடிப்பார் போலும்!

3. காமராஜரும், பக்தவத்சலமும் குற்றாலத்திற்குச் சென்று அங்கு தங்கியிருந்த—தாங்கள் தான் ஜஸ்டிஸ் கட்சியின் தலைவர்கள் என்று தம் பட்டமடித்துக் கொண்டிருந்த—சர். பி. டி. இராஜனைப் பேட்டி கண்டு, ஜஸ்டிஸ் கட்சியின் சார்பாகத் தேர்தலுக்கு (1946-ல் நடை பெற்ற தேர்தலுக்கு) ஆட்களை நிறுத்தவேண்டாம் என்று கேட்டுக் கொண்டார்களாம். அதற்கு அவர் "சி. ஆரையும், பார்ப்பனக்காங்கிரஸ் வாதிகளையும் ஒழித்து விடுவதானால் தாங்கள் தேர்தலில் போட்டியிடுவதில்லை" என்ற நிபந்தனையை விதித்தாராம். இதற்குக் காமராஜரும், பக்தவத்சலமும் ஒப்புக் கொண்டு இராஜனிடம் உடன்படிக்கை செய்து கொண்டார்களாம்.

4. காமராஜர்தான் தமிழ்நாடு காங்கரஸ் தலைவர் என்ற போதிலும், அவரை ஆட்டிப்படைப்பவர் நாகராஜ அய்யர்தான் என்பது நாடறிந்த இரகசியம். அவருக்குப் பலவிதமான கௌரவப்பட்டமும் உண்டாம்! இந்த மனிதரின் கூட்டுறவால், காமராஜருக்கு யோகமும் மங்களமுமாக இருந்தாலும், காமராஜர் செய்யும் செலவுகள் எல்லாம் காங்கரஸ் கமிட்டியின பணந்தானாம்.

5. விருது நகரிலுள்ள ஒரு மாஜி சேர்மனிடமிருந்து, நூல்விநியோக கார்டுபெற்று தருவதாக காமராஜரும், நாகராஜனும் 10,000 ரூபாய் வாங்கிக் கொண்டு ஏமாற்றி விட்டதாக அந்த வட்டாரத்தில் ஒரு செய்தி உலவுகிறது. அந்த சேர்மனும் திருடனைத் தேள் கொட்டியதுமாதிரி இருந்து விட்டாராம்.

6. காங்கரஸ் கமிட்டி பணத்திலிருந்து சத்தியமூர்த்தி நிதிக்காக ரூ. 25,000 ஒதுக்கப்பட்டதாம். இதை சர்தார்பட்டேல் ஒத்துக்கொள்ள மறுத்துவிட்டதுடன் தேர்தல் செலவுக்காக அகில இந்திய காங்காஸ் கமிட்டியால் அனுப்பப்பட்டிருந்த இருபத்து அய்யாயிரம் ரூபாயையும் திருப்பி அனுப்பும்படி சொல்லி விட்டாராம். அந்தப் பணத்தைத் திருப்பி அனுப்பினாரா? ஒதுக்கப்பட்ட பணம் என்ன ஆயிற்று? இதுவரையாதொரு விளக்கமும் இல்லையாம்.

7. காமராஜரை ஆதரிக்கும் புதிய முதலாளியும், முன்னாள் ஜஸ்டிஸ் கட்சிக்காரருமான குமாரசாமிராஜா தனக்குச் சொந்தமான ராஜபாளையம் மில்லில் 20,000 ரூபாய் மதிப்புள்ள சேர் தொகையை காமராஜர் பேரில் ஒதுக்கி வைத்திருக்கிறாராம். அதனால் தான் அவர் சட்டசபை மெம்பராகவும், மந்திரியாகவும் வர முடிந்ததென்றும் தெரிகிறது.

8. திருச்சிஜில்லா போர்டின் முன்னாள் தலைவரும், வெள்ளை அரசாங்கத்திடம் ஆகஸ்ட் "புரட்சி"யின் போது நாடறிய மன்னிப்புக் கேட்டுக் கொண்டவரும், தற்பொழுது வேலாயுதம் கொலை வழக்கில் ஈடுபட்டிருப்பவருமான பி. வெங்கடாஜலம் பிள்ளையைச் சட்டசபைத் தேர்தலில் நிறுத்துவதற்காக காமராஜரும், டி. எஸ். அருணாசலமும் 10,000 ரூ. பெற்றுக்கொண்டு அவரைச் சட்டசபைக்கு நிறுத்தியதாகத் தெரிகிறது.

"உன்னை அபேட்சகராக நிறுத்துகிறேன்" என்று பலரிடம் கூறி, பல ஆயிரக்கணக்கான ரூபாய்களை லஞ்சம் வாங்கிக்கொண்டதாக திருச்சி டி.எஸ். அருணாசலம், சிதம்பர பாரதி, குருசாமி நாயுடு போன்றவர்கள்மீது ஏராளமான புகார்கள் இருந்தும், அவர்கள் மீது எந்தவித நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளாமல் விட்டுவிட்டாராம். இவர்கள் தன் கையாட்களாக இருப்பதுதான் அதற்குக்காரணமாம். தேர்தல் முடிவுற்றவுடன், தேர்தலில் காங்கரஸ் கட்சியில் இருந்துகொண்டே, அதற்கு விரோதமாக நடந்தவர்களை விசாரணை செய்து அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ள ஒரு கமிட்டியைக் காமராஜர் ஏற்படுத்தினார். ஆனால் தன்னுடைய கையாட்களே பலர் ஒழுங்கீனமாக நடந்துகொண்டிருந்தது தெரியவந்தபடியால், அவர்கள் குட்டு வெளிப்பட்டுவிடுமே என்பதினால் அந்தக் கமிட்டி செயலாற்ற முடியாதபடி செய்துவிட்டார்.

மந்திரிசபை அமைப்பு நாடகத்தில் அவர் நடித்திருக்கும் நடிப்பு அபாரமானது! ஆரம்பத்தில் பிரகாசம் மந்திரிசபையை ஏற்படுத்துவதற்கு அரும்பாடுபட்டார். பிறகு பிரகாசத்தின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரச் சட்டசபை மெம்பர்களிடம் கையெழுத்தும் வாங்கினார். அதில் வெற்றி பெற்றுப் பிரகாசத்தை ஒழித்து ஓமந்தூரார் மந்திரிசபையை ஏற்படுத்தினார். இப்பொழுது இதையும் ஒழித்துச் சுப்பராயனையாவது, பக்தவத்சலத்தையாவது பிரதமராக்கக் கச்சையை வரிந்து கட்டிக்கொண்டு நிற்கிறார். இவருடைய போக்கு நமக்கும் புரியவில்லை. இவ்வளவு சின்னப்புத்தி படைத்திருக்கும் இவர் பெரியாரின் முகமூடியைக் கிழித்துவிடுவேன் என்று பிதற்றுகிறார். ஒரு கட்சியின் தலைவராக இருப்பவர் இந்தப் போக்கில் போவது மிகவும் கேவலமானது என்பதை இன்னும் இவர் உணரவில்லை.

1940-ல் தரங்கம்பாடியில் நடைபெற்ற கூட்டத்தில்தான் காங்கரஸ் கமிட்டியின் வரவு செலவுக் கணக்குக் காட்டப்பட்டதாம். அதற்குப்பின் 1946-ல் திண்ணனூரில் நடைபெற்ற கூட்டம்வரையில் கணக்கே காட்டப்படவில்லையாம். இடைக்காலத்தில்நடந்திருக்கும் ஊழல்கள் எண்ணற்றனவாம்.

மேலே காட்டப்பட்டிருப்பவைகள் ஒருசிலதான். சுயநலத்திற்காகவும்கமிட்டியின் பணத்தை விரையமாகச் செலவு செய்ய அவர் என்றுமே தவறியதில்லையாம்! உதாரணமாக: மாகாணக் கமிட்டி அங்கத்தினர் தேர்தல் ராமேஸ்வரம் தொகுதியில் நடைபெற்ற போது, விருதுநகர் கே. எஸ். முத்துச்சாமி என்பவரும் போட்டியிட்டாராம். அவர் தனக்கு எதிரியானபடியால் அவரை ஒழிக்கக் காங்கரஸ் கமிட்டிப்பணத்திலிருந்துசுமார் 7,000 ரூபாய்வரை செலவு செய்திருக்கிறாராம். இப்படியெல்லாம் தில்லுமுல்லு வேலைகள், செய்து தனக்குக் கையாட்களாக உள்ளவர்களையே கமிட்டி அங்கத்தினர்களாக்கிக் கொண்டிருக்கிறாம்.

## முடிவுரை:

மேலே கண்டவையெல்லாம் எனது சொந்தச் 'சரடு' அல்ல. காங்கரஸ் வட்டாரத்தில் நிலவிவரும் செய்திகள். நான் இவை அனைத்தையும் உண்மை என்று வாதிக்க முடியாவிட்டாலும், நீங்களும் இதைப் பொய் என்று தள்ளிவிட முடியாது. இவற்றில் ஏதாவது சந்தேகமாகவிருந்தால் கேள்விகளாகக் காமராஜரைக் கேளுங்கள். பதில் சொல்வாரா என்பதல் நான் உத்திரவாதமளிக்க முடியாது. ஏனெனில் இந்தப் பயங்கர உண்மைகளை ஒப்புக்கொள்ள, அவரது மாசு படிந்த உள்ளம் இடம் தராது என்பது தான் என் முடிவு.

"அத்திப்பழத்தைப் பிட்டால் அத்தனையும் புழு" என்பார்கள். அதைப்போல காமராஜர் போர்த்திக்கொண்டிருக்கும் தியாகத் திரையை விலக்கிப் பார்த்தால் சுயநலமும், சூதும், சூழ்ச்சியும், மலிந்து கிடப்பதைத்தான் காணமுடியும்.

இனிக் காங்கரஸ் தன் திட்டத்தைப் பொது மக்களிடம் விளக்கி ஓட்டுக் கேட்கும் என்று கூறிய காமராஜரே, இன்று ஓட்டுக் கேட்பதற்காகக் கூட்டப்படும் கூட்டங்களில் எதிர்க் கட்சியினரைக் கேவலமான முறையில் தாக்கிப் பேச ஆரம்பித்திருக்கிறார். நம்முடைய திட்டத்திலும், கொள்கையிலும் குறை இருப்பின் கூறட்டும், அதேசமயம் தங்களுடைய திட்டத்திலுள்ள நன்மைகளையும் விளக்கிப் பொதுமக்களிடம் ஓட் கேட்கட்டும். இதுதான் அரசியல் கட்சியின பேச்சு மேடையில் ஏறியிருப்போருக்கு அழகு. இதை விட்டுவிட்டு, மிகவும்

கீழ்த்தரமான முறையில் போவதைப் பார்த்தால் 'கல்கி' கூறிய சின்னப் புத்தி தம்மிடம் இருப்பதாகக் காட்டிக் கொண்டுவிடுவார் போல்தான் இருக்கிறது. பாவம்! அவரைக் கூறுவதிலும் குற்றமில்லை. திட்டம் எதுவாவது இருந்தால்தானே விளக்குவதற்கும். நாய் வேஷம் போட்டுக்கொண்டால் குரைத்துத்தானே ஆகவேண்டும் என்ற போக்கில் போகிறார். நாடகத்தில் நாய் வேஷத்தில் நடிப்பவன் கூட எதற்கெடுத்தாலும், எப்பப்பார்த்தாலும் குரைக்க ஆரம்பித்தால், சும்மாவிருக்கமாட்டார்கள் பார்க்க வந்திருப்பவர்கள் என்பதை மட்டும் எச்சரிக்கிறோம்.

—புத்ததாசன்.

---

கிராமந்தோறும்! "குணமணி" தருமவைத்தியம்!!

சித்தர் குருகுலத்தினின்று மாதந் தோறும் அரிய தமிழ் இரகசிய வைத்திய முறைகளுடன் வெளி வரும் வெளியீடு. சந்தாதாரர்களுக்கு மட்டும் கிராம மக்களுக்கு 100 பேர்கள் வரை 12 வித இலவச மருந்துகள் தருமசேவைக்குத் தரப்படும்—வருடச் சந்தா ரூ 6. 6 மாத சந்தா ரூ 3. தனிப்பிரதி அணா 8. வி. பி. கிடையாது.

சித்தர் திருத்தலம், துரோம்பேட்டை S.I.Ry.

---

[4ம் பக்கத் தொடர்ச்சி]

லயித்திருந்தது.

"அம்மா கண்டால்......?

"அதுதான் ஆத்துக்குப் போயிட்டாளே......!"

"வேறு யாராவது வந்துட்டா...!"

"யாருமே வரமாட்டா இப்போ...! சும்மா போ...சீக்கிரமாய் வீட்டைப் பெருக்கு ஹும்......!"

அவள் விழித்தாள். அவர் மிரட்டினார், அவள் அப்பனையே வேலையினின்றும் நீக்கிவிடுவதாக. அந்த மிரட்டலில் அஞ்சினாள் அவ் வஞ்சிக் கொடி.

நடுங்கிய உள்ளத்துடன் அறைக்குள் சென்றாள். அலங்கோலமாகக் கிடந்த அறையை அழகுபடுத்துவதில் முனைந்தாள். அவசர அவசரமாகத் தன் வேலையை முடித்துக்கொண்டு அய்யர் முன் வந்து நின்றாள்.

"எல்லாம் பொழுக்கியாச்சு நான் வரட்டுங்களா...?"

"என் கண்ணம்மா இப்படி அவசரப்படறே, ஆத்திலே ஒருவரும் இல்லையேண்ணு கவலைப் பட்டுக்கொண்டிருந்த சமயத்தில் நீ வந்தாய். என் மனமும் கொஞ்சம் திருப்தியடைந்தது. நீயோன்னா வந்ததும் வராததுமாய் இப்படி அவசரப்படறயே"

"வீட்டுக்கில்லீங்க. மாட்டுத் தொழுவை........."

"அது கிடக்கு சனியன். அதை அள்ளவேண்ணு இப்ப யார் உன்னை அடிச்சா. நாளைக்கும் சேத்து அள்ளினால் போகுது!...அது சரி இப்போ ...ஒரு......விஷயம் என்னன்னா...... ஹும்...முதலில் கை கால் கழுவிண்டு வா......"

என்றுமில்லாப் புதுமையுடன் தன் எஜமானின் நடவடிக்கையில் மாறுதலைக் கண்ட கண்ணம்மா ஆச்சரியப்பட்டாளே யொழிய அதில் அடங்கிக் கிடக்கும் சூட்சமத்தை அறிந்தாளில்லை.

தனக்குள் தானே சிந்தித்துக் கொண்ட கண்ணம்மா கை கால் கழுவிக்கொண்டு வந்தாள். அய்யர் வாசற்படியைப் பிடித்தவண்ணம் நெடுந் தொலைவிலுள்ள ஆகாய வெளியைப் பார்த்துக்கொண்டு நின்றார்.

அவள், அவர் எதிரே வந்து நின்றாள்- இனி என்ன செய்யவேண்டுமென்று கேட்கும் பாவனையில்.

கண்ணம்மா! படுக்கையெல்லாம் ஒரே மூட்டைப் பூச்சி. அவாளெல்லாம் வர இன்னும் நாலுநாட்களாவதுஆகும். அதற்குள் பிராணனே போய்விடும். நீயாவது கொஞ்சம் சுத்தப்படுத்து...! அய்யர் வார்த்தையில் அன்பு கரைபுரண்டோடியது. அநுதாபம் நிறைந்திருந்தது.

"நானா..." கண்ணம்மாள் வார்த்தையில் மிரட்சி! ஒருவித பயங்கர உணர்ச்சி, ஆச்சரியத் தொனி அடங்கிக் கிடந்தது.

"ஏன்? தொடக்கூடாது என்கிறாயோ! அதனால்தானே முதலிலேயே கை கால் கழுவிவிட்டு வரச் சொன்னேன். கங்காதேவி பட்டால் தோஷமொன்றுமில்லை......"

அவள் மறுத்துப் பேசவில்லை. பேசாது வீட்டுக்குள் போனாள்.

அவள் தேடித் தேடிப் பார்த்தாள். ஒரு மூட்டைப் பூச்சியாவது காணவில்லை. "இந்த அய்யர் என்னை வேலை வாங்கணுமுண்ணு எவ்வளவு பெரிய பொய் சொல்லிவிட்டார்.;' என்று எண்ணிய கண்ணம்மாள் அடக்க முடியாது சிரித்துவிட்டாள்.

சிரித்த கண்ணம்மாள் நிமிர்ந்தாள். கதவைத் தாளிட்ட அய்யர் கனவேகமாக வந்து தன் கையைப் பற்றுவதைக் கண்டாள்.

"அடப்பாவி, இப்படியுமா உன் புத்தி கெட்டு விட்டது. அய்யோ தெய்வமே என்னைக் காப்பாற்று! அப்பா.........நீ எங்கிருக்கிறாய்......? அய்யா! தெரியாமெ உன்னாட்டெவந்து அகப்பட்டுக் கொண்டேன். என் கற்பைக்காத்திடு! உனக்குக் கோடிப் புண்ணியம் கிடைக்கும்"

"என்னாசையை நிறைவேற்று. அதைவிட உனக்கு ஆயிரமடங்கு புண்ணியம் கிடைக்கும்"

சீ...கிழட்டுப்பயலே உன்க்கு வெட்கமாயில்லை!

அவள் கதறினாள். அய்யரோ காமக்கிறுக்குக் கொண்டார். தானாகக் கனியாததைத் தானே கனியவைப்பதாக வீராப்புப்பேசினார் அய்யர். அவளை நெருங்கினார். அவள் விலகினாள். கிழட்டுப் பார்ப்பானாயிருந்தாலும் தைரியத்தில் கொஞ்சம்......!

கொஞ்சமும் நெஞ்சிரக்கமின்றி வஞ்சியாளைக் கொஞ்சிட பஞ்சணையில் ஏற்றினார். அவள் அவரை—அய்யரை தன்னால் இயன்ற மட்டும் அடித்தாள்—கடித்தாள்—குத்தினாள்....... பாவம்! அவள் என்ன செய்வாள். பெண் தானே! அய்யர் கை வலுத்தது. ஆரணங்கின் கை சோர்ந்தது.

கண்ணம்மாள் கடும் போராட்டத்திற்குப் பின் பஞ்சணையில் சாய்க்கப் பட்டாள். எவ்வளவோ முயன்றாள். என்ன செய்தும் என்ன பிரயோஜனம்?

*   *

மறுநாள் கிராமத்து அதிகாரியிடம் வழக்கு சென்றது கற்பழிக்கப்பட்ட கண்ணம்மாளைப்பற்றி! கிராமாதிகாரி அய்யர் இனம். அவர் விசாரித்தார். செய்த குற்றத்திற்குத் தண்டனையும் விதித்தார்? என்ன தண்டனை தெரியுமா......? பத்துரூபாய் நஷ்டஈடு...! அதை ஏற்றுக்கொள்ளாவிடில் கிராமத்திலேயே வாழ முடியாது என எச்சரித்துக் கூறினார் கிராமாதிகாரி. அதை—அந்த எச்சரிக்கையை மீறத் தீண்டாத கந்தனுக்கு தைரிய மேது? என்னே நியாயத்தின் விசித்திரம்!

கற்பழித்த அய்யரோ பத்து ரூபாய் நஷ்டத்தில் தன் கௌரவத்தைக் காப்பாற்றிக் கொண்டார். ஆனால், கற்பழிக்கப்பட்ட கண்ணம்மாள்......? அவள் விபச்சாரி...! அவள் சாகும் வரை அந்தப்பட்டம் அவளை விட்டு விலகாது!

ஆனால்...உண்மை...? கண்ணம்மாள் குற்றமற்றவள்...! விலையற்ற மாணிக்கம்! அதைச் சமூகம் ஒப்புக் கொள்ளுமா?

(3ம் பக்கத்தொடர்ச்சி)

டிய பொருளிலக்கணம் கற்கத் தகாததொன்றாக்கப்பட்டது. இது இலக்கணத்தோடு நிற்காமல் இலக்கியத்தையும் பிடித்துக்கொண்டது. மக்களின் வாழ்க்கை முறையை அப்படியே படம் பிடித்துக் காட்டும் திருக்குறட் 'காமத்துப்பால்' அந்நூலுக்கே குற்றமுடையதெனக் கொள்ளப்பட்டது. அது சிற்றின்பம் என ஒதுக்கித்தள்ளப்பட்டது; தமிழர்களை வெறுத்தொதுக்கும்படி செய்யப்பட்டது. அத்தவற்றை எடுத்துக்காட்டித் தமிழ் மக்களுக்கு அப்பொருளிலக்கணத்தின் மேல் விருப்புண்டாக்கி, அதை முனைந்து கற்று முன்னையோர் வாழ்க்கை முறையை அறிந்து, தமது தாழ்நிலைக்கிரங்கி முன்னேறும்படி தூண்டுவதே இக்கட்டுரையின் முழு நோக்கமாகும்.

பொருளிலக்கணப்பாகுபாடு.

தொல்காப்பியப்பொருளதிகாரத்திற்கூறப்படும் பொருள் அகப்பொருள், புறப்பொருள் என இரு வகைப்படும். அகப்பொருளாவது, ஒத்த அன்புடைய ஒருவனும், ஒருத்தியும் தாமாக எதிர்ப்பட்டுக் காதல் கொண்டு, காதல் முதிர்ந்து, பெற்றோர் அறிய மணஞ்செய்து கொண்டு வாழும் வாழ்க்கை முறையைக் கூறுவது. புறமாவது, அக் காதலரது அகவாழ்க்கைக்குப் பயன்படும் கல்வி, செல்வம், அரசியல் முதலிய பொருள்பற்றிக் கூறுவது. அகம், அகப்பொருள், அகத்திணை எனவும், புறம், புறப்பொருள், புறத்திணை எனவும் பெயர் பெறும். திணை-ஒழுக்கம். அகப்பொருள் வாழ்வியலும், புறப்பொருள் உலகியலும் ஆகும்.

அகப்பொருள்.

புறப்பொருளினும், அகப்பொருளே சிறந்தது. அகவொழுக்கம், புறவொழுக்கம் என்னும் இரு வகையொழுக்கத்தில், புறவொழுக்கம் வாழ்க்கைக்குத் துணையாவதேயன்றி அகவொழுக்கம் போல வாழ்க்கையை உண்டாக்குவதன்று. உலகுயிர்த் தோற்றத்திற்கே அகவொழுக்கம் காரணமாய் இருப்பதால் எல்லாப் பொருளினும் அவ்வகப் பொருள் சிறந்ததொன்றாகும். உலகுயிர்த் தோற்றமான உருவை உண்டாக்குவது கருவேயாகும். அக் கருவையுண்டாக்குவது காமமேயாகும். காமச் சேர்க்கையால் கருவும், கரு முதிர்ந்து உருவும், உருவில் உயிரும் தோன்றுகின்றன. அக் கருவானது ஆண், பெண் என்னும் இருவகை உருவப் பொருள்களில் அமைந்து, தக்க காலத்தில் அவ்விருபாற் கருவும் ஒன்று சேர்ந்து உருவாகிறது. கரு வுருவாக்குவதில் ஆண்பால், கருவை ஒன்று சேர்க்கும் புணர்ச்சி மட்டுமே உடையது. பெண்பாலோ புணர்ச்சியோடு, கருவை உருவாக்கி, உயிராக்கி உலகில் விடுவதால் அகவொழுக்கத்திற்கும், உலக வாழ்க்கைக்கும் ஆண்பாலைவிடப் பெண்பாலே சிறந்ததாகும். எனவே, ஆண் பெண்பால்களின் கரு ஒன்று சேரும் தகுதியடைந்ததும், ஆண்பாலும் பெண்பாலும் ஒன்று கூடுதற்குக் காரணமான காமம் தோன்றுகிறது. ஆண் பெண் இரண்டையும் ஒன்று சேர்த்து, உலகை இடையறாது நடப்பிக்கும் காமப் பொருள், சிறப்புடைய பொருள்களில் சிறப்புடைய பொருளாகும். இதைவிடச் சிறந்த பொருள் உலகில் வேறொன்றுமில்லை. காமம், இன்பம் என்பன ஒரு பொருட் சொற்கள். காமம் என்னும் சொல்லுக்கு இழிந்த பொருள் கொண்டவர் அகப்பொருளின் பெருமையறியாதவரேயாவர். காமம் என்னும் சொல்லை வள்ளுவர் 50 இடங்களில் வழங்கியுள்ளார். இக்கருத்தையே ஆசிரியர்,

"எல்லா உயிர்க்கும்
இன்பம் என்பது
தான்அமர்ந்து வரூஉம்
மேவற் றாகும்"
(பொருள்-29)

எனக் கூறியுள்ளார்.

இன்பம் என்பதுதான்—இன்பமானது எல்லா உயிர்க்கும்—மக்களேயன்றி விலங்கு முதலிய மற்றை உயிர்களுக்கும், அமர்ந்து வரும் மேவற்றாகும்—ஆண்பெண் என்னும் கூறுபாட்டால் பொருந்தி நிகழும். அறிவியலார் (விஞ்ஞானிகள்) உலக இயற்கைப்பொருள்களின் சேர்க்கை முறையால் பல புதுப்பொருள்களை உண்டாக்கி உலகை வாழ்விப்பது போல, ஆண்பால், பெண்பால் என்னும் அறிவியலார் ஆண்பெண் கருவை அவை ஒன்று சேரும் பருவமறிந்து ஒன்றுசேர்த்து உருவாக்கி, உயிராக்கி உலகை வாழ்வித்து வருகின்றனர். ஆகவே, கரு உருவாகும் நிலையை அடைந்ததும் தானாக எழும் ஓர் உணர்ச்சியாகிய காமத்தால் தூண்டப்பட்ட ஆணும் பெண்ணும் ஒன்றையொன்று நாடிக் கூடிக்களிக்கும் புணர்ச்சியே உலகுயிர்த் தோற்றத்திற்கும், வாழ்க்கை நலத்திற்கும் இன்றியமையாக் காரணமாய் இருப்பதனாலும், அப்புணர்ச்சி நிகழும் அகவொழுக்கமானது இன்றியமையாப் பொருள்களில் ஒன்றாய் இருப்பதனாலும், அவ்வகவொழுக்கத்தின் தன்மையை ஆண் பெண் இருபாலாரும் உணர்ந்து, அதன் தகுதியறிந்து நுகர்ந்து, (அனுபவித்து) இன்புற்று வாழ வேண்டும் என்பதையே பழந்தமிழ் மக்கள் அகப்பொருள் எனச் சிறப்பித்து, அதைப் பலவாறு விரித்தும், இலக்கண வரையறை செய்தும் பொன்போலப் போற்றி வந்தனர்.

புணர்ச்சிக்குக் காரணமாகிய காதல் அரும்பவே, ஒருவனும் ஒருத்தியும் தாமாகவே எதிர்ப்பட்டுக் கூடுதல் இயற்கையாதலால், அதைத் தடை செய்வதும், இழித்துக் கூறுவதும் அகப்பொருளின் உண்மைப் பொருளை அறியாக் குறையேயாகும். உலகத் தோற்றத்திற்கும், வாழ்க்கை நலத்திற்கும் காரணமான அகவொழுக்கமாகிய பேரின்பத்தினைத் தகாத வழியிற் செலுத்தியும், தப்பான பொருள் கொண்டும் சிற்றின்பம் என இழிவுபடுத்திவிட்டனர்.

"கண்டுகேட் டுண்டுயிர்த்
துற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே யுள"
(குறள்—1101)

"தாம் வீழ்வார் மென்றோள்
துயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணான் உலகு"
(குறள்—1103)

என வள்ளுவர் கூறுவதும் இக் கருத்துடனேயாகும். அதாவது, கண்ணால் கண்டும், காதால்கேட்டும், வாயால் உண்டும், மூக்கால் முகர்ந்தும், உடம்பால் தீண்டியும் இன்புறும் ஐவகையான இன்பமும் இவளிடத்தே உள்ளன. இவளோடு கூடிவாழும் இன்பத்

ரோஜா முத்தையா

தைவிட நீங்கள் கூறும் தாமரைக் கண்ணான் உலகின்கண் மிகுதியான இன்பம் உண்டோ? இல்லை. (வீழ்வார்—விரும்பப்படுவார். மென்றோள் துயில்—புணர்ச்சி,) 'மனைவியைத் துறந்து, காட்டையடைந்து தவஞ்செய்து தாமரைக் கண்ணான் உலகையடைந்து இன்புறுங்கள்' என்றார்க்கு, மனைவியோடு கூடிவாழும் இல்லற இன்பத்தைவிட வேறு இன்பம் இல்லை என மறுத்துக்கூறியது. இருவேறு உருவினரான ஓர் ஆணையும் பெண்ணையும் ஒன்றாக்கி, ஒருவர்க்குண்டான நலக்கேடு இருவர்க்கும் ஒத்த பங்காகக் கொண்டொழுகும்படி செய்வது இருபாலிடத்தும் தோன்றி ஒன்றுபட்ட காதலன்பேயாகும். ஆகலால், இனியேனும் அகப்பொருளின் பெருமையை உணர்ந்து துய்த்து நலம் பெறுவோமாக.

---

(2ம் பக்கத் தொடர்ச்சி)

முழுதும் ஏதோ ஒரு வெறி ஏறியது; ஒவ்வொரு நரம்பும் விம்மித் துடித்தது; நான் என்னை மறந்தேன்; ஒரே பாய்ச்சலில் என் தாயார் இருந்த இடத்தையடைந்தேன். அவள் முதலில் திடுக்கிட்டாள். பிறகு...? அவளும் பெண்தானே!......ஒரே கோலாகலம்! குளத்துப் படித்துறையில் காமவேள் நடனம்(?)

எவ்வளவு நேரம் அப்படியிருந்தோமோ தெரியவில்லை. திடுமெனப் பிரவேசித்தார் என் தந்தை. எங்கள் நிலைமையைக் கண்ணாரக் கண்டார். கோபம் மூண்டது; ஆத்திரம் அதிகரித்தது. "அடே பாதகா" என்று கூவித் தன் கரத்திலிருந்த மழுவை என் கழுத்தை நோக்கி வீசினார். எனக்கு அவ்வளவுதான் தெரியும். பிறகு தூங்கி விழித்ததுபோல் எழுந்து பார்க்கிறேன். என் தலையைக்காணவில்லை. அதாவது, என் சொந்தத் தலைக்குப்பதில் யானைத்தலை ஒட்டிக்கொண்டிருக்கிறது, என் கழுத்திலே! என்னெதிரே கிடந்து என்தாய் புலம்பிக் கொண்டிருக்கிறாள்; என் தகப்பனாரோ அருகிலேயே மரம்போல் அசையாது நின்று கொண்டிருக்கிறார். பக்கத்தில் ஒரு யானையின் கன்று தலையில்லாமுண்டமாகக் கிடந்து துடித்துக்கொண்டிருக்கிறது.

"நீங்கள் மாத்திரம் என்ன ஒழுங்கு? நீங்கள் செய்யாத எந்தத் தவறை உங்கள் மகன் செய்து விட்டான்? அன்று மதுரையில், தன் தாயைப்புணர்ந்து, தகப்பனைக்கொன்ற ஒரு பார்ப்பானை நீங்கள் மன்னித்துவிடவில்லையா? உங்கள் மகனிடம் மாத்திரம் என் இந்தக் கோபம்? உங்கள் மனைவி மாத்திரம் பதிவிரதையாயிருக்கவேண்டுமா?" என்று என் தாயார் அப்பாவைப் பார்த்துக் கேள்விமேல் கேள்வியாக அடுக்கிக்கொண்டிருந்தாள். ஒன்றுக்காவது வாய் திறக்காமல் என் தகப்பனார் அப்பாலே சென்று விட்டார்.

என் தாய்தான் எனக்கு ஆறுதல் சொன்னாள். 'கணபதி விரைவில் உனக்குத் திருமணம் செய்து வைக்கிறேன். நீ கவலைப்படாதே, உன் அழகு முகம் அலங்கோலமானதே என்று அவதிப்படாதே' என்றாள். 'அம்மா! மணந்தால் உன்னைப் போன்ற ஓர் அழகியை மணப்பேன். அல்லது, பிரம்மசாரியாகவே இருப்பேன் என்று கடுமையாகச் சபதம் செய்து உடனே அந்த இடத்தை விட்டு வெளியேறினேன். அன்று வந்தது தான்.

என் தகப்பனார் அது முதல் என் தாயைத் தனியே விடுவதில்லை. எப்போதும் தன்பக்கத்திலேயே வைத்துக்கொண்டுவிட்டார், சந்தேகமிகுதியால்.

என் காரியமோ பலிக்கவில்லை. ஏமாற்றமும், ஏக்கமும் மிகுந்தவனாய் வீட்டை விட்டு வெளியேறிய நானோ அன்று முதல் இன்றுவரை, என் தாயைப்போல அழகுபடைத்த பெண் எங்காவது கிடைப்பாளா என்று பார்க்கத்தான் ஆற்றங்கரை குளத்தங்கரையெல்லாம் சுற்றியலைகிறேன். இதுவரையில் ஒருத்தியும் கிடைக்கவேயில்லை."

"ஆற்றங்கரை, குளத்தங்கரைகளில் மாத்திரம் தேடுவானேன்?"

"அதுவா? அங்குதானே என் தாயைப் பார்த்த நிலையில், பெண்களின் இயற்கையழகைக்காண முடியும். அதற்காகத்தான் எப்போதும் அங்கே உட்கார்ந்து கொண்டிருப்பது. இப்போது தெரிகிறதா, என் காரியம் தோல்வியுற்ற சங்கதி எப்படி என்பது!"

"ஆபாசம், ஆபாசம்!! உன்னை வேண்டினால் உலகத்தில் எதுவும் நடக்கும் என நம்புகிறார்களே இந்த உன்மத்தர்கள், இவர்களிருக்கும்வரை இந்த நாடு உருப்படுமா, நீயே சொல், கணபதி! கணபதி!! கணபதி!!! எங்கே சொல்லிக்கொள்ளாமல் போய் விட்டாய்?"

திடீரென விழித்துக்கொண்டேன். "என்னடா இது புலம்பல்! யாரது கணபதி?" என்று எழுப்பினான் நண்பன். எழுந்து உட்கார்ந்துகொண்டு சுற்றிப்பார்த்தேன். பக்கத்தில் "விநாயக புராணம்" தலையணை மாதிரி கிடந்தது, விரித்தபடியே!

["பெருச்சாளி"]

## கரூர் தாலூகா திராவிடக்கழக மாநாடு!

கரூர் நகர திராவிடக் கழகத்தின் ஆணையின்படி தோழர்களான ஆர். பி. சாமி, கே. இராமசாமி ஆகியோர் தலைவர் பெரியாரவர்களைப் பட்டவாய்த் தலையில் கேட்டுக்கொண்டதற்கிணங்கி, பெரியாரவர்களும் ஏப்ரல் அல்லது மே மாதத்தில் வைத்துக்கொள்ள, நாளைப் பின்னர் அறிவிப்பதாகத் தெரிவித்தார்கள்.

அதன்பின் தாலூகா பிரமுகர்களனைவருக்கும் கமிட்டித் தீர்மானத்தின்படி விசேட அழைப்புகள் விடுக்கப்பட்டு கரூர் நேஷனல் லாட்ஜில் 19—3—49-ம் நாள் விசேடக் கூட்டம் நடந்தது.

அக்கூட்டத்திற்கு வரவேற்புக் குழுவுக்குத் தலைவராகத் தோழர் எஸ். மல்லையனும், செயலாளர்களாக கே. இராமசாமி என். ரங்கராசுவும், பொருளாளராக கே. எஸ். ராமசாமியும், விளம்பர அதிகாரியாக எம். இராமசாமியும், தொண்டர் படைத் தலைவராக எஸ் ஆர். கருப்பையாவும், நிதி வசூல் கமிட்டிக்கு நகரமன்றத் துணைத் தலைவர் தோழர் என். ரத்தினம் உள்பட 12 பேரும் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றனர்.

மேலும் மாநாட்டிற்குத் தலைவர்கள் அனைவரையும் அழைப்பதெனவும், மாநாட்டில் சீர்திருத்த நாடகம் நடத்துவிப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

## வடஆர்க்காட்டுத் தோழர்களுக்கு!

பேராசிரியர் இலக்குவனார் அவர்கள் நமது மாவட்டத்தில் மே. திங்கள் முதல் வாரம், முழுவதும் சுற்றி இலக்கிய மறுமலர்ச்சி சொற்பொழிவாற்ற இசைந்திருக்கிறார்கள். ஆகவே நம் மாவட்டத்திலுள்ள பலவகை நிலையத்தோழர்களும் ஆங்காங்கே கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்து 5-4-49-க்குள் கீழ்க்கண்ட முகவரிக்கு அறிவித்து விட வேண்டுகிறேன்.

சுதன்; பூட்டுத்தாக்கு
மேல் விசாரம் வழி. (வ. ஆ.)

## பகுத்தறிவுப் படிப்பகத்தின் பணிக்குழுக் கூட்டம்.

பூட்டுத்தாக்கு மார்ச் 16.

நேற்றுத் தோழர் சுதன் தலைமையில் நடந்த கூட்டத்தில், கவிக் குயிலின் மறைவுக்கு வருந்தியும், இ. எ. ஊர்வலத்தினரைக் கைது செய்வதைக் கண்டித்தும், மகாத்மா தொண்டனுக்குத் தடை என்ற நிலைமை, ஊர்தோறும் தடை மீறும் படலத்தைத் தான் உண்டுபண்ணும் என எச்சரித்தும் பல தீர்மானங்கள் நிறைவேறின,

ரோஜா முத்தையா

# ஆளவந்தாரே! மாளவைக்காதீர்!

★

'புண்ணிய பாரதத்தைக் கண்ணியமற்ற கசடர் ஆள்வதா! ஆரியரும் உயர் நாரியரும் வாழ்ந்திருந்த நாட்டைத் தாழ்ந்த நிலையுள்ள ஆங்கிலர் ஆள்வதா? அன்பின் உறைவிடமாய் ஆண்டிருந்த அரசர்களின் அரியாசனத்தில் அயோக்கியர் அமர்ந்து ஆட்சி புரிவதா? பண்பின் உறைவிடமாய்த் திகழ்ந்த இத்திரு நாட்டை தீயோர்கள் நடத்துவதா? சால்புடைய சீரிய இந்நாட்டின் சிங்காதனத்திலே சிற்றறிவாளர்கள் இருப்பதா? அந்நியர் நமை ஆள்வதா? அன்னையின் கால்களில் விலங்குகளோ? அருமைத் தாயின் கரங்களிலே தளையா? தோழர்களே! இது நேர்மையா? நீதியா? முறையா? சரியா? நாம் ஏற்றுக் கொண்டுதான் வாழவேண்டுமா? மான உணர்ச்சி மங்கிவிட்டதா? நாமிருக்கும் நாடு நமதென்றறிய வேண்டாமா? நம்மை நாமே ஆள்வோம் என உணரவேண்டாமா? ஆகவே எழுங்கள், விழியுங்கள், ஆங்கிலரின் கொட்டத்தை அடக்கி, கட்டுப்பாடாய் நின்று நேர்மையான நம் அரசை அமைப்போம்!'

இவையும், இவை போன்ற பல எழுச்சி முரசுகளையும் அந்தக் காலத்திலே, அந்நியர் நம்மையாண்ட அந்த நேரத்திலே, ஆயிரமாயிரம் மேடைகளிலே அருமைக் காங்கரஸ் தோழர்கள் முழக்கமிட்டதைக் கேட்டிருக்கிறோம். வியாபாரம் செய்ய வந்து, இந்நாட்டின் வாரிசாகிவிட்ட பரங்கியரைத் தொலைத்து விட்டுத்தான் மறு வேலை! தாய் நாட்டின் நாய்ப் பிழைப்பை ஒழித்து விட்டுத்தான் வேறு காரியம். அந்நிய அரசை அழித்துவிட்டுத் தான் மற்ற காரியங்கள்! என்ற முழக்கம் வாலிபர்களின் செவியிலே வந்து குடி புகுந்தது. அந்நிய ஆட்சியின் அடக்குமுறைகளை அறிந்திருந்த அறிஞர்களின் மனம், மாய்க்கவேண்டும் அவர்களை என்ற எண்ணத்திலே ஈடுபட்டிருந்தது.

அதன் பலன்—அதன் விளைவு—நாட்டிலே தியாகத்தீரர்கள் தீயிலே குதிக்கவும் தயங்கமாட்டோம், தாயகம் வாழ்ந்தால் போதும் என்ற முழக்கம்! எதற்கும் ஈடு கொடுப்போம் எம்நாடு நலியாமல் இருந்தால் போதும் என்ற வீர உலா! வெள்ளையருக்குப் போட்டியாக கப்பலோட்டிய வீர சிதம்பரங்கள்! சிறையிலே செக்கிழுத்த சீரிய சிதம்பரங்கள்! காராக்கிரகத்திலே கல்லுடைத்த கற்றறிந்த சிதம்பரங்கள்! மூளை வெளியே வந்தபோதும், மூச்சுத்திணறிய போதும், வந்தேமாதரம் என்று கூறிக்கொண்டே கொடிபற்றிய கரங்களுடனேயே மாண்ட மாவீரன் குமரன்! தாயகத்தின் விடுதலைக்காகத் தூக்குக்கயிற்றையும் முத்தமிடுவேன் என முழக்கிய பகத்சிங்! அடிமையாட்சியின் சின்னமாய ஆங்கிலரின் தடி மார்பிலே தாக்கி மாநில வாழ்வை நீக்கும்படியான நிலை ஏற்பட்டாலும் சரியே என்ற பாஞ்சால சிங்கம் லாலாலஜபதிராய்! புரட்சியினாலேயே பரங்கியரைப் பொசுக்கிடுவோம் எனசபதமிட்ட ராஷ்பிகாரி இயக்கம்! அத்தனையும் அந்நியனை, ஆங்கிலனை, அடிமைகளாக்கி வைத்த அற்பர்களை, இந்நாட்டை விட்டு ஓட்டித்தான் ஆகவேண்டும் என்ற முழக்கத்தின் முடிவு.

இந்நாட்டார் பட்டபாடுகள் பயனளிக்காமற்போகவில்லை. வீழ்ச்சியுற்ற இந்நாட்டை எழுச்சி பெறச் செய்ய வீறுகொண்டெழுந்தவாலிபர்களின் வீரச்செயல்கள் வீண் போகவில்லை. நமதே நாடு எனக் கழறி கஷ்டங்கள் அடைந்த நாவலந்தீவாரின் கனவு நனவாகாமல் போகவில்லை. 'இன்னலுக்குப் பிறகு இன்பம்; தியாகத்திற்குப் பின் திறந்த வெளி; சூறாவளிக் காற்றுக்குப்பின் சுதந்திரம்; வதைபடலத்திற்கு அப்பால் விடுதலை. வாடியபின் வளமான வாழ்வு! இந்த இன்சொற்கள்தான், மானிலத்திலே மகிழ்ச்சியை நிரப்பும் மங்காத மாண்புடைய இம்மகத்தானச் சொற்கள்தான் சூரையாடிற்று அந்தச் சூரர்களின் சிந்தையை.

அந்நியன் சென்றால் அவல வாழ்வு அழியும்; வேற்று நாட்டான் வெளியேறினால் வேண்டியதைப் பெற்று வளமாக வாழுவோம்; பரங்கியர் பாரதத்தை விட்டால் பஞ்சம் பறந்தோடிடும்; குள்ளநரித் தந்திரம் படைத்த கள்ளர் கூட்டம் பொன் விளையும் நாட்டை விட்டுப் போய்விட்டால் பாலும், தேனும் கலந்துண்ணலாம். பருவ மழை இல்லாமைக்கும், பாட்டாளி மக்களின் பரிதவிப்புக்கும், பாவையரின் பரிதாப நிலைக்கும், இதற்கும் அதற்கும் எதற்கும் எம்நாட்டை ஆண்டிருக்கும் இங்கிலீசர்களின் நடத்தைதான். ஆகவே அவர்கள் அகற்றப்பட்டுத்தான் ஆகவேண்டும். இல்லையேல் இங்கு இன்பம் தங்காது.

இத்தனைக்கும்பின் — எத்தனையோ இளஞ் சிங்கங்களின் பலிக்குப்பின்—இன்ப சுதந்திரம் 1947 ஆகஸ்ட் பதினைந்திலே நள்ளிரவு பனிரெண்டு மணி நேரத்திலே வந்தது. அடைந்த சுதந்திரத்திற்கு அளவற்ற ஆனந்தம் அடைந்தோம். பெற்ற விடுதலையின் பயனாய் பூரித்தோம். 'உலகம் உறங்கியிருக்கும் இந்நேரத்தில் இந்தியா இன்பப் புன்னகையுடன் விழித்திருந்து விடுதலை வாங்குகிறது' என 'வீரர்' ஜவாஹர் செப்பினார். 'சிந்தை குளிர்ந்தது தடி தங்கமே' என்று சிந்து பாடினோம். பஞ்சை வாழ்வு பறந்திடும்; நஞ்சையும், புஞ்சையும் விளைச்சல் காட்டிடும்; அன்பு ஆண்டிடும்; அஹிம்சை அரியாசனத்தில் அமர்ந்திடும்; பொங்கும் இன்பம் எங்கும் தங்குக எனப் பண்பாடினோம், ஆட்டங்கள் நடத்தினோம்; கூட்டங்கள் போட்டோம்; குவலயத்தில் குன்றாத களிப்புப் பெருக்கெடுத்தோடுவது இப்புனித நாளிலேதான் எனப் பெருமையுடன் பகர்ந்திட்டோம். ஆனால்—மடியிலே அமர்ந்து மழலைமொழிப்பேசி மாதாவை மகிழ்ச்சிபுரிக்க கொண்டு செல்

னும் குழவியை, களிப்புடன் கட்டியணைப்பாள் என எண்ணியிருக்க, அம் மங்கைமழுக்கொண்டுமழலையைத்தாக்கினால்; பஞ்சணையிலே கொஞ்சுதலையேதான் வழங்கிடுவாள் இவ்வஞ்சி என எண்ணியிருக்க, அங்கேரிழையாள் நஞ்சினை கலந்தளித்தாளானால்; இன்ப நடனம் ஆடி, கைகளையும், கால்களையும் எடுத்தடிவைத்து, கண்களிலே கனிவு தோன்ற ஆடிடும் தோகை, ஆடியபடியே கத்தி ஒன்றை மார்பிலே சொருகினால்; அன்பே! ஆருயிரே! என்று கொஞ்சுமொழிபேசிய வஞ்சகன் பக்கத்துவீட்டுப்பார்வதத்துடன் புனல் விளையாட்டு விளையாடுகிறான் என்று பாவை அறிந்தால், தெரிந்தால்; கண்ணாளா!! வா! இன்பந் தந்திடு! துன்பம் அகற்றிடு! என்று ஆணழகனைப்பார்த்து அழைத்த அழகுமங்கை அழைக்கப்பட்டவன் 'அலி' என்றறிந்தால்ஏற்படும் இன்னல்- இத்தகுநிலைதான் கூண்டொடித்து வெளிக்கிளம்பிய கண்ணியவான்களின் காட்டு ஆட்சியில் மக்களின் நிலையாகயிருக்கிறது. அவர்களின் கருத்து பாலைவன நீராகியது. அவர்களின் இன்பகீதம் செவிடன் காதிலேகேட்ட சங்கைப் போலாயிற்று. அவர்களின் அழகுக் கோட்டை ஆகாயத்திலே தூள் தூளாகப் பறந்தது.

இன்றைய ஆட்சியாளர் மாட்சிமை பொருந்திய பெரியவர்களின் பணியாட்களாக, எடுபிடி ஆட்களாக இருக்கிறார்களே ஒழிய பாட்டாளிகளின் பக்கமாவது திரும்பியிருக்கிறார்களா? இவர்களின் ஆட்சியிலே எத்தனை வேலை நிறுத்தங்கள்? வேலையற்று செய்யப்பட்டனவா அவைகள்—இல்லை—தங்களின் இன்னல்போக்க, கன்னல் மொழித் தேன் தோகையரின் துவண்ட நிலையை ஒழிக்க, செந்தமிழைப் பிழிந்தெடுத்த மதுர ரசமான தங்கள் மழலைகள் மரணத்தின் வாயிலை எட்டிப்பிடிக்காமலிருக்கத்தானே. அவர்களின் அல்லல் அழியத்தானே வேலை நிறுத்தம்? துயரத்தின் தொல்லை தாங்கமுடியாமல்தானே வேலை நிறுத்தம் செய்தனர். அந்தக் கதியற்றோரை கடுஞ் சிறையினில் அடைத்துவிட்டு, நிதிபடைத்தோரிடம் கொஞ்சிக் குலவினோர் 'காங்கிரஸ்' சர்க்கார்! 'ஏன் நாட்டில் ஏழைகள் வாழவா? வேண்டாமா? என்று கேட்டுக்கொண்டிருக்கும் நேரத்தில் அவர்களின் 'ஆப்பிளான' வாழைப்பழத்திற்கு வரியா? முதலாளிகளின் மனதை மகிழச் செய்துவிட்டு, மார்புடையப் பாடுபட்டுப் பணம் சேர்க்கும் அந்தப் பாட்டாளியின் தலையிலே முக்காலணாக் கார்டு, இரண்டணாக் கவரா? ஆளவந்தோரே! மாள வைக்காதீர், என்ற அந்த அபலைகளின் குரல் குவலயத்தினை ஆளவந்திருக்கும் உங்கள் காதருகே ஒலிக்கவில்லையா என உயர் குடிப்பிறப்பினர் கேட்டுப்பார்த்தும் பலனில்லை என்ற நிலையா? ஏழையின் கண்ணீர் கூரிய வாளையொக்கும் என்பதனை அறியார்களோ அரசு புரிவோர்.

"வெள்ளையனின் வாய்ப் பூட்டுச் சட்டம் ஒழிக என முழக்கமிட்டவர்களின் ஆட்சியிலே 144 இல்லாத ஊர் எது என்று சொல்ல முடியாத நிலை! ரூபாய்க்கு எத்தனை படி அரிசி? என்று கேட்ட காலம் போய், படி அரிசி எவ்வளவு ரூபாய் என்று கேட்கும் போதாத காலம் வந்தது இப் புனிதர்கள் ஆட்சியில்தான்.

இவர்களின் அலங்கோலமான ஆட்சியின் அவலத்தை, அகிலமுழுதும் பரப்பினார்வங்க சரத்போஸ்; சூதும், சூழ்ச்சியும், நாணயமற்ற தன்மையும், நேர்மையற்ற நிலைமையும், மத்திய, மாகாண சர்க்காரிடம் நிறைந்திருக்கிறதென ஜெய்ப்பூர் காங்கரஸ் கண்ணுக்குத் தெரியக்காட்டியது. ஆச்சாரிய கிருபலானியிலிருந்து, அழகேசன், சுப்பையாக்கள் வரையிலே இவர்களின் இழி செயல்களைக் கண்டித்துப் பேசியாகிவிட்டது. இன்னும் என்ன செய்யப் போகிறார்கள் இச் சிலர்கள். எவ்வளவோ எதிர்பார்க்கிறார்கள் மக்கள்.

எதையாவது கேட்டால் கருஞ்சட்டைக்காரனா! கம்யூனிஸ்டா! உள்ளே போய் இருந்துவிட்டுவா! என்ற பதில்தானா?

காந்தியின் பெயர் கூறி ஓட்டுப் பெற்று சட்டசபையினை அலங்கரிக்கும் அமைச்சர்களே! ஆங்கிலேயன் ஆட்சிக்கும் உங்கள் ஆட்சிக்கும் வேற்றுமையுண்டா?

வேதியர்கள் உருவிலே வெல்லிங்டன் ஆட்சிதானே நடைபெறுகிறது.

அந்த நாளிலே ஜாலியன் வாலா பாக்கிலே சுட்டான்! சுட்டான்!! குண்டு தீரும்வரையிலே சுட்டான் டயர்; அதேபோல் அடித்தீர்கள்! அடித்தீர்கள்!! நெடுமரமென மக்கள் கீழேவிழும் வரையில், உங்கள் கை ஓயும் வரையில் அடித்தீர்கள் கும்பகோணத்திலே! ரௌலட் சட்டத்தை வெல்லிங்டன் கொண்டு வந்த நேரத்திலே வாய் கிழியப் பேசினீர்களே, இதோ அதன் மறுபதிப்பு நீங்கள் நிறைவேற்றி வைத்திருக்கும் நச்சுப்பல்—பொதுஜன பாதுகாப்புத் திருத்தச் சட்டம்! அந்தக் காலத்திலே 1942-லே கூண்டோடு கைலாசமாய்க் காங்கரஸ் தலைவர்களைப் பிடித்தான் பரங்கியன்; இதோ குடந்தையிலே நள்ளிரவிலே, திராவிடத் தலைவர்கள் கூட்டாகச் சிறை பிடிக்கப்பட்டனர்; சென்னையிலே நிர்வாகக் கமிட்டிக் கூட்டத்திலே தொண்ணூறுவரை அடைத்த மாபெரும் வீரர் பட்டாளம்; அந்தக் காலத்திலே அருணாக்களும், அச்சுதபட்டவர்த்தன்களும், ஜெயப்பிரகாஷ் நாராயணன்களும் அதிகார வெறிபிடித்த ஆங்கிலேயரின் கண்ணுக்குத் தெரியாமல் திரிந்தினர். இதோ உங்களாட்சியில் ஜீவாக்கள் எங்கே, நம்பியார்களின் நிலையென்ன, கலியாணசுந்தரங்களின் கதியென்ன, இராமமூர்த்திகளின் இருப்பிடமெங்கே! நாட்டை மாய்க்க வந்திருக்கும் மந்திரிகளே! எடுத்தெழுதினால் இடம் இருக்காது. ஆகவே அதையஞ்சி இத்துடன் விடுக்கிறோம். இனியேனும் மனிதப் பண்போடு புனித ஆட்சியை அமையுங்கள். இல்லையேல்........?

—மு. சுப்பையன்.

---

## அரிக்காரன் வலசில் கழகம்.

தாராபுரம் தாலூகாவைச் சேர்ந்த அரிக்காரன் வலசில் 14—3—49-ல் திராவிடக் கழகம் நிறுவப்பட்டு, தோழர்களான ஆர். சுப்பிரமணியம்; தலைவர், எ. என். இராமசாமி; துணைத் தலைவர், என். இராமசாமி; செயலாளராகவும் மற்றும் சில உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப் பெற்றனர்.

அச்சிட்டு வெளியிடும் ஆசிரியர் என். கரிவரதசாமி. தமிழன் அச்சகம். 59. கச்சேரி வீதி' ஈரோடு.